www.tamilarangam.net

# களத்தில்

இனத்துவேச அரசியல் சேற்றில் சிங்கள தேசம் மூழ்கிக்கிடக்கும் வரையில் தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நீதியான, நியாயபூர்வமான அரசியல் தீர்வை நாம் சிங்கள ஆளும் வர்க்கத்திடம் இருந்து எதிர்பார்க்க முடியாது.

*- தமிழீழத் தேசியத் தலைவர்*

திருவள்ளுவர் ஆண்டு 2028 (20.05. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (161) அன்பளிப்பு: 60 p



திமிங்கலக்கடலும் வரண்டு போகலாம், இரும்புப்பாறையும் வெடித்துச் சிதறலாம்

## ஓயாத புயலாக 22 ஆண்டுகள்

தமிழீழத் தேச வரலாற்றில் 05.05.1976 அதிமுக்கியமான நாள். அன்றுதான் தமிழினம் தொலைத்துவிட்ட சுதந்திரத்தைத் தேட, தமிழினம் விற்றுவிட்ட தன்மானத்தை மீண்டும் மீட்க, தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் அமைப்பாக யாருக்குமே எதுக்குமே விலைபோகா தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தலைமையிலே தமிழீழ மக்கள் விடுதலைப் புயலாகப் புறப்பட்டனர். அந்தத் தலைவன் இன்று தமிழீழத் தேசத் தலைவனாக வன்னியில் வைத்துக் கூறிய வார்த்தைகள் :-

**அன்பார்ந்த தமிழீழ மக்களே !**

நாம் ஒரு சிறிய தேசிய இனம். எமது விடுதலைப் போராட்டத்திற்கு எந்த ஒரு உலக நாடும் உதவி வழங்கவில்லை. இதனால் எமது இயக்கத்தின் பலமும் வளமும் வரையறுக்கப் பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆயினும் இது வரை காலமும் எமது பலத்தையும் வளத்தையும்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

**'ஜெயசுக்குறிய்' ஓராண்டு நிறைவு இதழ்**

# ஜயசிக்குறுய் ஓராண்டுப் பூர்த்தி

# தமிழீழமெங்கும் கோலாகலக் கொண்டாட்டங்கள்

- ★ தமிழீழத் தேசியக்கொடி மரதனோட்ட வீரரால் மூத்த தளபதி கருணாவிடம் கையளிக்கப்பட்டது
- ★ தேசத் தலைவர் பிரபாகரனின் உரை தேசமெங்கும் பலமுறை ஒலிப்பு
- ★ கலை கலாச்சார விளையாட்டு போட்டிகள் பேரணிகள் கூட்டங்கள் நடாத்தப்பட்டன

பத்தே பத்து நாட்களில் பாதை திறந்திடுவோம்– தமிழீழத் தாயகத்தின் வன்னிப் பெரு நிலப்பரப்பை மூன்றாய்ப் பிளந்திடுவோம் – அடர் காட்டுக்குள் புலிப்படையை விரட்டி – அடக்கிடுவோம் தமிழர் விடுதலை உணர்வை என்று, ரத்வத்தை சூளுரைக்க

**தேசத்தலைவர் விடுத்த செய்தி நடுப்பக்கத்தில்....**

மாமாவின் முயற்சிக்கு கணவன் நடித்த வெ... ஒன்றின் பொ... நிச்சயம்' என்ற பொருள்படும் ஜயசிக்குறுய் என்று இராணுவக் குறியீட்டுப் பெயர் சூட்டி சிறீலங்காவின் முப்படைத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா அனுப்பி வைத்த பெரும்படை– மூன்று பட்டாலியன் சிங் களச்சேனை– வன்னியில் ஓராண்டாகியும் மாங்குளம் தேடும் பரிதாபநிலையில் ஒரு பட்டாலியனையே தொலைத்துவிட்டுப் பதைபதைத்து நிற்கிறது. நாட்டைப்பிடிக்க

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

### சிங்களக் கட்டுப்பாட்டுப் பகுதியில்

## 20 இராணுவத்தினர் பலி 54 படையினர் காயம்

## விடுதலைப் புலிகளுக்கு எதுவித இழப்பும் இல்லை

சிங்களப் படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள செட்டிகுளம் பகுதியில் வைத்து பலத்த பாதுகாப்புடன் பவள் கவச வாகனங்கள், ஜீப் வண்டிகள், பஸ் வண்டிகள் சகிதம் சென்று கொண்டிருந்த சிறீலங்காவின் இராணுவ அணி விடுதலைப் புலிகளினால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இத் தாக்குதலின் பொழுது 20 சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட 54 இராணுவத் தினர் காயப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவத்தினருக்குப் பலத்த இழப்புக்களை ஏற் படுத்திய இத்தாக்குதலின் பொழுது பி.கே.எல்.எம்.ஜி, ஏ.கே.எல்.எம்.ஜி உட்பட பல ஆயுதங்களும், பல நூற்றுக் கணக்கான ரவைகள் மற்றும் இராணுவத் தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டுள்ளன. ஜயசிக்குறுய் ஓராண்டுப் பூர்த்தியை

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## பிரதான இ... தளபதி ...பட்டார்

...றீலங்காவின் வடமராட்சி இராணுவத்தளபதி பிரிகேடியர் லாறி விஜயரட்னா பருத்தித் துறையில் 524 வது பிரிகேட் தலைமையகத்திற்கு அண்மையில் வைத்து தற்கொடைத் தாக்குதலில் கொல்லப்பட்டார். யாழ்குடா நாட்டினை சிறீலங்கா ஆக்கிரமித்த பின்னர் கொல்லப்பட்ட சிறீலங்காவின்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொடுமையிலும் கொடுமை

சிறீலங்கா இராணுவத்தின் இனவெறியுடன் கூடிய பாலியல் வெறித்தனத்தினால் மேலும் ஒரு தமிழ்ப் பெண் மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கொல்லப்பட்டுள்ள செய்தி இப்பொழுது வெளியாகி உள்ளது. ஏப்ரல் 30ம் திகதி இரவு பத்து மணிக்கு மன்னார் நொச்சிக்குளம் இராணுவச் சோதனைச் சாவடிக்கு முன்பாக சிறீலங்கா இராணுவத்தினர் 36 வயதான தமிழ்ப் பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்த முயன்ற பொழுது அவர் அதற்கு இடம்கொடுக்க மறுக்கவே அவரைச் சுடடுக் கொன்றுள்ளனர். இப்பெண் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என ஊர்மக்கள் மூலம் சிறீலங்கா இராணுவத்தினர் நன்கு அறிந்தே இக்கொடுமையிலும் கொடுமையான மனிதநேயமே அற்ற இக்கொடிய செயலில் இறங்கி இப் படுகொலையைப் புரிந்துள்ளனர் . ★

# ஜயசுக்குறுய் ஓராண்டு......

வந்தவர்களே நாட்டைக் காக்க ஆயுதங்கள் அள்ளிக் கொடுத்த வரலாறு வன்னியிலே பதிவாகி சந்திரிகா குடும்பத்தின் தலைமைப் பதவிக்கே முற்றுப் புள்ளியாகி நிற்கிறது. இதனை மாற்றச் சந்திரிகா, சிங்கள இளம் சந்ததியைக் களப்பலி கொடுத்துக் கொண்டிருக்கின்றார். பச்சைக்கிளி கொண்டு படைப்பயிற்சி கொடுத்தும் பலன்காணாச் சந்திரிகா இச்சைமொழி பல சொல்லியும் இராணுவத்திற்கு ஆள் சேரா நிலை கண்டு பள்ளிமாணவர்களைப் படையில் சேர்க்க கட்டாய இராணுவச்சேவைச் சட்டங்கள் கொண்டு வரத் துடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்நேரத்தில் தமிழீழ மக்கள், கடலெனப் பொங்கி வந்த பகைவிலக்கி–விநியோகப்பாதை திறக்கப் புறப்பட்டவர்களுக்கு வானுலகப்பாதை திறக்கவைத்த தங்கள் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை கண்டு– தலைவன் ஆற்றல் கண்டு இந்த ஜயசிக்குறுய் இன் ஓராண்டு பூர்த்தியை தேச விடுதலையின் வெற்றிக்கு அச்சவாரம் தந்திட்ட நாளாகக் கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்துள்ளனர்.

வீரத்திரு நகராம் வன்னிப் பெருநிலப்பரப்பு எங்கும் மக்கள் வயது வேறுபாடின்றி பெருந்திரள் பேரணிகள் நடாத்தியும் வீதி தோறும் ஒலிபரப்புச் சாதனங்கள் பொருத்தி தேச விடுதலைக் கீதங்கள் ஒலிபரப்பியும் ஜயசிக்குறுய் ஓராண்டுப் பூர்த்தியினை தேசிய பெருவிழாவாக கண்டு மகிழ்ந்துள்ளனர்.

13ம் திகதியன்று இரவு மாவீரர்களுக்கு அனைத்து இல்லங்களிலும் எண்ணெய் விளக்குகள் ஏற்றி மக்கள் நேசத்துடன் நினைவு கூர்ந்தனர். இல்லம் எல்லாம் சுடர்விட்ட ஈகை விளக்குகள் மக்களும் விடுதலைப் புலிகளும் ஒருவரே என்று கூறுமாப் போல் ஒளிசிந்தின.

மக்கள் சிறீலங்காவின் உணவுத் தடையினால் வாடிய நிலையிலும் தம்மால் செய்யக் கூடிய சிறந்த உணவு வகைளைச் செய்து போராளிகளுக்கு கொடுத்து அவர்களுடன் ஒரே குடும்பமாய் உண்டு மகிழ்ந்தனர். பல தாய்மார் தங்கள் குழந்தைகளுக்கு உணவூட்டி மகிழ்வது போல் போராளிகளுக்கும் உணவூட்டி பெருமகிழ்வுற்றனர்.

பேரணிகளின் போது மக்கள் அணிந்திருந்த் சின்னங்களில் களத்திலே விழும் மாவீரன் உயிருள்ள போராளிக்குத் தன் ஆயுதத்தைக் கையளிக்கும் காட்சி சித்தரிக்கப்பட்டிருந்தது.

ஜயசிக்குறுய் பற்றிய பாடல்களைக் கொண்ட ஒலி மிழைநாடா ஒன்று இந்நினைவு வாரத்தையொட்டி விடுதலைப் புலிகளின் கலை இலக்கிய பண்பாட்டுக் கழகத்தால் வெமியிட்டு வைக்கப்பட்டது.

04.12.97 ல் முன்னூறு விசேட பயிற்சி பெற்ற கொமாண்டோக்களினை அழிக்க காரணமாக இருந்த மாலதி பெண்கள் அணியினைச் சித்தரிக்கும் அலங்கரிக்கப்பட்ட ஊர்தி ,வன்னியில் சிக்கிய சிங்களப் படையின்ரை ரத்வத்தை முன்னேறப் பணிப்பது போன்ற கேலிச் சித்தரங்களைக் கொண்ட ஊர்திகள் ம்ற்றும் மாவீரர் திருவுருவங்கள் என்பன ஊர்வலங்களில் இடம் பெற்றன.

தமிழீழத் தேசக்கொடி அஞ்சல் மரதன் ஓட்டமாக ஊர்கள் தோறும் கொண்டு செல்லப்பட்டு இறுதியில் தளபதி கருணாவிடம் கையளிக்கப்பட்டது.

தேசத் தலைவர் மேதகு. பிரபாகரன் அவர்கள் புலிகளின் குரல் வானொலி மூலம் விடுத்த ஜயசிக்குறுய் ஓராண்டு நிறைவுச் செய்தி வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் மூலம் அடிக்கடி ஒலிபரப்பப்பட்டு மக்களால் ஆர்வத்துடன் செவிமடுக்கப்பட்டது.

இருமுக்கிய கூட்டங்கள் நடாத்தப்பட்டன. புதுக்குடியிருப்பு சிறீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் மாவீரர் நினைவுத் திணைக்கள தலைவர் திரு.பொன் தியாகம் அவர்களினால் ஈகை விளக்கேற்றப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்கள் அரசியல் பிரிவின் தலைவி வேணுகாவால் தேசக்கொடி ஏற்றப்பட்டது. மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மக்கள் மலர்மாலை சூட்டி அஞ்சலித்தனர். கூட்டத்தில் பேசிய அருட்திரு. பிரான்சீஸ் ஜோசப் அடிகள் அந்நியப் படைகளுக்குத் தலை வணங்காது போராட்டம் நடாத்தும் தேசத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். ஒரு கட்டத்தில் பிரபாகரன் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு கடவுள் கொடுத்த கொடை எனவும் குறிப்பிட்டார்.

மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய களமுனைத் தளபதி கருணா அவர்கள் தேசியத் தலைவரை இராணுவத் தந்திரங்களைத் தன்னகத்தே கொண்ட நடமாடும் அறிவுக்களஞ்சியம் எனக்குறிப்பிட்டார்.

எதிரியானவன் தனது வெற்றிக்கு குறிப்பிட்ட பகுதியில் பாரிய படைக் குவிப்பிலும் கூடிய படைக்கல சக்தியிலுமே தங்கியுள்ளான் ஆனால் எமது தலைவரோ சிறிய படைப் பலத்தையும் குறைந்த படைக்கல சக்தியையும் வைத்துக் கொண்டு போர்த் தந்திரோபாயங்கள் மூலம் எதிரியின் நடவடிக்கைகளை முறியடித்து வருகின்றார். முன்னேறும் எதிரியை உள்ளே வரவிட்டு எமது வீரர்கள் தாக்குகின்றனர். தாக்குதலுக்கு தகுந்த சூழ்நிலை இல்லாவிட்டால் தந்திரோபாயப் பின்நகர்வை மேற்கொள்கின்றனர். இதனை எதிரியானவன் எமது பலவீனமாக கருதுகின்றான். ஆனால் இதுவே எமது பலமாகும்.

எப்போது தாக்கு வ... எப்போது தந்திரோபாயப் பின்னகர்வை மேற்கொள்வது என்பது எமது தலைவருக்கு நன்றாகத் தெரியும் என்றார். ★

# ஓயாத புயலாக.......

நுட்பமாகப் பயன்படுத்தி எமது பலம் சிதைந்து போகாமல் சாதுாரியமாகப் போரிட்டு எதிரிக்குப் பெரும் சவாலாக நிற்கின்றோம்.

சிங்களம் பெரிய ஒரு தேசிய இனம். அத்தோடு அரசு என்ற அந்தஸ்தையும் பெற்று உலகத்தோடு உறவுகளை வைத்திருக்கின்றது. அதன் பலமும் வளமும் மிகப் பெரியது. முழு உலகமும் அதற்கு முண்டுகொடுத்து நிற்கின்றது. எல்லா வகைகளிலும் அதற்கு உதவிகளை வழங்கி வருகின்றது. இப்படியான பலம் பொருந்திய பகைவனுடன் நாம் தனித்து நின்று போராடி நிற்பது என்பது ஒரு மகத்தான சாதனை என்றே சொல்ல வேண்டும். எமது இயக்கம் முன்னெடுத்து வரும் விடுதலைப் போராட்டம் இருபது ஆண்டுகளுக்கு மேலான வீர வரலாற்றைக் கொண்டது. **இந்த நீண்ட காலத்தில் எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் ஓயாது புயலாக நின்று நாம் போராடி வருகின்றோம்.** எமது போராற்றலைக் கண்டு உலகமே வியந்து நிற்கிறது. தனித்து நின்று எமது சொந்தக் கால்களில் நிலைத்து நின்று எமது சக்திக்கு மிஞ்சிய பகைவருடன் நாம் போராட முடிந்ததென்றால் அதனை எமது மக்களின் ஆதரவால் தான் சாதிக்க முடிந்தது. எமது மக்களின் மண்பற்றும் விடுதலைப்பற்றும் பிரமாதமானது. **அந்தத் தணியாத ஊற்றிலிருந்தே எமது சக்தி பிறக்கின்றது".**

ஆம்! தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் தமிழீழ மக்கள் ஒவ்வொரு வரதும் பங்களிப்பால் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையில் 22 ஆண்டுகளைத் தாண்டி 23வது ஆண்டில் உறுதியுடன் கால்வைக்கின்றது. இந்த உறுதியும் வலிமைமிக்க வழிகாட்டலும் அளப்பரிய தியாகங்களும் தமிழீழ விடுதலையை நனவாக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை உலகுக்கு தெட்டத்தெளிவாக்கி நிற்கிறது. ★

# பிரதான இராணுவத்தளபதி......

முதலாவது அதி உயர் இராணுவ அதிகாரி இவர் ஆவார்.

இச்சம்பவம் வியாழக்கிழமை 14.05.98 அன்று நடைபெற்றுள்ளது. கொழும்புக்கு மாற்றலாகிய பிரிகேடியர் லாறி விஜயரட்னா கொழும்பு புறப்படுவதற்கு முன்னர் வீரவாகு கட்டிடத்தில் நடந்த பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்ட பின் ஹாபர் வீதியூடாக மீன்சந்தை வீதிக்கு இராணுவ வாகனத்தில் வந்து கொண்டிருக்கையில் உடலில் குண்டேந்திய ஒருவர் வாகனத்தை நோக்கிப் பாய்ந்த பொழுது பெரும் ...த்தத்துடன் வெடித்த ...ல் பிரிகேடியர் லாறி ... கொல்லப் பட... கிறது. பிரிகேடியர் லா... உளவுத்துறையில ... பெற்றவர் எனவும் இவர் வடமராட்சியில் தனது கடமையை முடித்துக் கொண்டு சிறீலங்காவின் பாதுகாப்புக் கல்லூரியின் உபதலைமைப் பொறுப்பை ஏற்று கொழும்பு செல்ல விருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவரது மனைவியும் சிறீலங்கா இராணுவத்தில் சட்டத் துறையில் கடமை புரிகின்றார்.

இவர் கொல்லப்பட்டமை சிறீலங்காப் படையினருக்குப் பலத்த இழப்பு எனத் தெரிவித்துள்ள பத்திரிகைகள் சிறீலங்காவின் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரிக்கும் திட்டத்திற்குப் பலத்த அடியெனவும் விமரிசித்துள்ளன.

குண்டேந்தி வந்தவர் முதலில் பெண் எனச் செய்திகள் தெரிவித்த போதும் பின்னர் அவர் ஆண் எனத் தெரிய ...ருள்ளதாக செய்திகள் ...ள்ளன. ★

# சிங்களப் கட்டுப்பாட்டுப் பகுதியில்......

ஒட்டி சிங்களப் படைகள் தாக்குதல்கள் நடாத்தப்படலாம் என மிக உசார் நிலையில் இருந்த போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் வெற்றித்தாக்குதலை எதுவித இழப்புமின்றி வெற்றிகரமாக நடாத்திச் சென்றுள்ளமை சிறீலங்கா இராணுவ வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வவனியாவிலும் இரு பொலிசார் சாவு

ஜயசிக்குறுய் ஓராண்டு நிறைவு தினத்தன்று வவுனியாவில் சிறீலங்காவின் இராணுவ–பொலிஸ் கூட்டு ரோந்தணி மீது தமிழீழ வ... மற்றொரு சிங்களப் பொலிசா ... அவ்விடத்திலேயே கொல்லப்பட ஏனையோர் ஓடித் தப்பித்துக் கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் சாந்தீபன் ( கிறிஸ்ணபிள்ளை சிவதாசன் – யாழ்ப்பாணம்) வீரச்சாவுற்றார். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மூன்று உண்மைகள்

இம் மாதம் 13ம் திகதி ஓராண்டினைப் பூர்த்தி செய்யும் சிறிலங்காவின் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை மூன்று முக்கிய உண்மைகளை உலகுக்கு தெட்டத் தெளிவாக்கியுள்ளது.

முதலாவது – தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் உள்நாட்டு பிரச்சியையாக இல்லாமல் சர்வதேசப் பிரச்சினையாகி உள்ளது. "ஒரு பிரச்சினைக்கு யுத்தம் தான் தீர்வு என்ற நிலை தோன்றும் பொழுது அது சர்வதேசப் பிரச்சினையாக மாறுகிறது. உள்நாட்டுப் பிரச்சினை என்றால் உள்நாட்டில் ஏற்படும் யுத்தத்தை தீர்த்து வைப்பதற்கு யுத்தம் அல்லாத வேறு ஆற்றலுள்ள வழிகளை ஆட்சியில் உள்ள அரசாங்கம் முன்வைக்க வேண்டும்" என்பது –'சர்வதேசத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளுங்கள்' – என்னும் நூலை எழுதிய பிரித்தானியாவின் சர்வதேச தொடர்புகள் ஆய்வுச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் கிறிஸ் பிறவுனின் கருத்து. ஆனால், சிறீலங்காவின் இன்றைய அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்கு, முதல் தீர்வாக யுத்தத்தையே முன்வைத்துள்ளது. தமிழர்களுக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தத்தினால் அழித்தொழிக்க முயல்தலே சிறீலங்காவின் முதல் தீர்வாக உள்ளது. இந்த யுத்தத் தீர்வின் வெளிப்பாடே ஜயசிக்குறுய் என்னும் இராணுவக் குறியீட்டுப் பெயருடன் சிறீலங்கா கடந்த ஓராண்டாக நடாத்தி வரும் யுத்தம்.

இரண்டாவது – ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை என்பது தமிழீழத் தேசத்தின் வடபகுதியை துண்டுகளாகப் பிரித்து தமிழீழ மக்களின் ஆதிபத்திய உரிமையுள்ள வரலாற்றுத் தாயகத்தை அழித்தொழிப்பதையும், தமிழீழ மக்களுக்கு தேசிய பாதுகாப்பினை வழங்கி வரும் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் இறைமையை இல்லாதொழிப்பதையும் நோக்குகளாகக் கொண்ட இராணுவ நடவடிக்கை. இதன் இறுதி நோக்கு தமிழ் மக்களின் பிரிக்கப்பட முடியாத சுயநிர்ணய உரிமையை இல்லா தொழித்தல் என்னும் சர்வதேசக் குற்றச் செயலேயாகும். மேலும், தனது அரச பயங்கரவாதத்தினால் தமிழ் மக்களினை இன அழிப்பு இனத் துன்புறுத்தல் செய்யும் சிறீலங்கா தமிழ்மக்களின் விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கமெனப் பிரகடனப்படுத்தி ஜயசிக்குறுய் உட்பட சிறீலங்காவின் இராணுவ ஆக்கிரமிப்புக்களின் மேல் தமிழர் பெறும் வெற்றிகளைக் கொச்சைப்படுத்த முற்பட்டு வருகிறது. அமைதியான சூழ்நிலைகளில் பயங்கரவாதம் என்பதற்கும் அரசியல் வன்முறைகள் நடைபெறும் பொழுது பயங்கரவாதம் என்பதற்கும் இடையிலுள்ள தன்மைகளை 'பயங்கரவாத யுகத்தில் சர்வதேச அரசியல் உரிமைகள்' என்னும் நூலில் விளக்கும் பேராசிரியர் அட்ரியன் குல்கே, தமிழ் மக்களின் ஆயுத எதிர்ப்பினை பயங்கரவாதம் எனலாமா எனக் கேள்வி எழுப்பிச் செல்கிறார். மேலும், பயங்கரவாதம் ஒரு குழுவால் நடாத்தப்படும் செயற்பாடு. ஆனால், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ தமிழீழ மக்களால் உயிரிலும் மேலாக நேசிக்கப்படும் மக்கள் பேரியக்கம். அதனால்தான் அலைகடலென நவீன படைக்கருவிகளுடன் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் இறங்கிய சிறீலங்காவை ஓராண்டுகளாக தடுத்து நிறுத்த முடிந்தது. ஜயசிக்குறுய் களம் உலகுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளை ஆற்றலுள்ள மரபுவழி இராணுவம் – சக்தி படைத்த கொரில்லா அமைப்பு என்று மட்டுமல்ல மகத்தான மக்கள் சக்தி என்பதையும் தெளிவாக உணர்த்தியுள்ளது.

இறுதியாக, தமிழ் மக்கள் சிறீலங்காவால் இனஅழிப்பு இராணுவ நடவடிக்கைகளைத் தடுக்க அவர்கள் சார்பாக தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை சர்வதேச உலகு அங்கீகரிக்க வேண்டும். ஒரு அரசாங்கம் அமைதியையும் பாதுகாப்பையும் வழங்க ஆற்றலற்றுக் காணப்படும் பொழுது மக்களது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் இயக்கம் ஆற்றலும் வலிமையும் உள்ள இயக்கமாகக் காணப்படும் பொழுது அதனை அங்கீகரித்து துன்புறும் மக்களிற்கு நிவாரணத்தை ஏற்படுத்த சர்வதேசச் சட்டங்கள் இடமளிக்கின்றன. இந்த வகையிலேயே பலஸ்தீனிய விடுதலை இயக்கம் முதல் அயர்லாந்து புரட்சி இராணுவம் வரை உலகால் அங்கீகரிக்கப்பட்டன. ஜயசிக்குறுயின் மேல் தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த ஓராண்டு வெற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆற்றலையும் வலிமையையும் மீண்டும் உலகுக்கு உணர்த்தி நிற்கிறது. வன்னிப் பெருநிலப்பரப்பில் சிறீலங்காவின் பெரும் படை எடுப்பான ஜயசிக்குறுயினை தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்ட விடுதலைப் புலிகள் அதே நேரத்தில் தென் தமிழீழத்தில் பெரும்பாலான பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதிலும் யாழ்குடா நாட்டினை மீட்பதற்கான வேலைத் திட்டத்தில் வெற்றிகள் ஈட்டியும் நிற்கின்றனர். எனவே, பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சார்பாக அவர்களின் இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினை சர்வதேச உலகு அங்கீகரிப்பது ஜயசிக்குறுய் போன்ற இராணுவ நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மேல் சிறீலங்கா திணித்து அவர்களை வாட்டி வதைப்பதைத் தடுத்து பிரச்சினைக்கு விரைவான தீர்வு தோன்ற வழிவகுக்கும்.

இது விரைவுபடுவதை தடுக்க சிறீலங்கா மீண்டும் மீண்டும் இராணுவ ஆக்கிரமிப்புக்களைப் புதிது புதிதாகத் தொடரும். அதனைத் தடுக்க புலம்பெயர் தமிழீழ மக்களாகிய நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உடன் உதவ வேண்டிய பெருங் கடமையைச் சுமந்து நிற்கின்றோம். இதுவே தேசத் தலைவர் பிரபாகரனின் ஜெயசிக்குறுய் ஓராண்டு வெற்றிச் செய்தியின் அழைப்பாகவும் உள்ளது. ★

# அபிவிருத்தி நிதியை போருக்கு பயன்படுத்தும் மூன்றாம் உலக நாடுகள்

**ஆ**சிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் பெறும் நாடுகளின் இராணுவச் செலவீன கணக்காய்வு அறிக்கைகளை அந்த வங்கி கேட்டுப் பெறவேண்டும் என்று அமெரிக்க சர்வதேச விவகாரக் குழுவுக்கான உதவி நிதி அமைச்சர் டிமோதி கெய்த்னர் (Timothy Keythner) வலியுறுத்தியுள்ளமையானது மிகவும் பயன்தரக் கூடிய கோரிக்கை ஒன்றேயாகும். ஆனால், இக்கோரி க்கையைவிட அமெரிக்க அரசைச் சார்ந்தவர்களுக்கு எந்தளவிற்கு தார்மீகப் பலம் உண்டு என்பது கேள்விக்குறியேயாகும். சிறீலங்கா போன்ற மூன்றாம் உலக நாடுகளினால் உதவி வழங்கும் நாடுகளில் இருந்தும் உதவி வழங்கும் நிறுவனங்களிடம் இருந்தும் பெற்றுக் கொள்ளும் நிதி, அரசின் வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் விடயம் ஒன்றும் புதியது அல்ல. இவ்வாறான நிதிகள் யுத்தத்திற்குத் திருப்பிவிடப்பட்ட வண்ணமேயுள்ளன. ஆனால், அவை இவ்வுலக நிதிகளை யுத்தத்திற்கு அரசாங்கம் பயன்படுத்தாது போலக் காட்ட விளையலாம். இருப்பினும் இந்நிதிகள் ஏதோ ஒரு வழியில் யுத்தத்திற்குப் பயன்படுபவையாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக அபி விருத்தித் தேவைக்கென கொள்வனவு செய்யப்படும் பொருட்கள், அபிவிருத்தி நடவடிக்கைக்கென மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் கூட யுத்தத்திற்குப் பயன்படுபவையாகவேயுள்ளன. எடுத்துக்காட்டாக, இன்று சிறீலங்கா இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள புல்டோசர்கள், டிரக் வண்டிகள், டிரக்டர் வண்டிகள் என்பனவற்றில் பெருமளவானவை அபிவிருத்தித் தேவைக்கென கொள்வனவு செய்யப்பட்டவையும் அன்பளிப்புச் செய்யப்பட்டவையுமே ஆகும். இந்த வகையில் அபி விருத்திக்கான நிதி யுத்தத்தின் தேவைகளுக்கு இவ்வாறான வகையில் கூடப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதேசமயம், உலக சராசரி இராணுவச் செலவீட்டுக்கு அதிகரித்த இராணுவச் செலவைச் செய்யும் நாடுகள் குறிப்பாக, 3ம் உலக நாடுகள், தமது அபிவிருத்திக்கான நிதியில் இருந்தே பெரும்பாலானவற்றை யுத்தத்திற்கு பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறு இல்லாதுவிடில் அந்நாடுகள் தமது நிதித் தேவையை எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்? ஏனெனில், சாதாரணமான நிலையிலேயே இவை தமது பொருளாதார நெருக்கடிகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் என உதவி வழங்கும் நாடுகளையும் நிறுவனங்களையும் இரங்கிக்கேட்கும் நிலையிலேயே உள்ளன. வருடாவருடம் இவ் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னராக இந்நாடுகள் பெருந்தொகை உதவி கேட்பதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்வதில் இருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறான நிலையில் உள்ள நாடுகள் கட்டுக்கடங்காத இராணுவச் செலவீட்டை எவ்வாறு வெளியாரின் நிதியை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தாமல் சமாளிக்கமுடியும். சிலசமயம் அபிவிருத்தியென்ற பெயரில் ஏற்றுக் கொள்ளும் நிதியின் பெரும்பகுதியை அபிவிருத்தி என்ற பெயரில் பயன்படுத்துபவையாக இருப்பினும்கூட, இந்நாடுகள் தமது உற்பத்தி வருமானத்தின் பெரும் பகுதியை இராணுவச் செலவீடு செய்வதற்கு வெளியில் இருந்துவரும் உதவியே காரணம் என்பதில் ஐயத்துக்கே இடமில்லை. ஆகையினால், ஆசிய அபிவிருத்தி வங்கி என்ன, எந்த நிதி அமைப்புக்களும் சரி, அரசாங்கங்களும் சரி யுத்தத்தில் ஈடுபடும் அரசுகளுக்கு அதிலும் சிறீலங்கா போன்று 3ம் உலக நாடுகள் வரிசையில் இடம்பிடித்துக் கொண்டு வருடாந்த செலவீட்டில் மூன்றில் ஒரு பகுதி வரை இராணுவத்திற்குச் செலவிடும் அரசுகளுக்கு உதவுவது என்பது யுத்தத்திற்கு உதவுவது போன்றதேயாகும்.

இந்நாடுகள் அபிவிரு த்தியைவிட யுத்தத்திற்கே பெரும் நிதிச் செலவீடு செய்வதால் இவர்களுக்கு வழங்கப்படும் உதவியும் யுத்தத்திற்கு ஏதோ ஒருவகையில் உதவி வழங்கப்படுவதாகவே உள்ளது. ஆனால், அமெரிக்கா போன்ற நாடுகள் யுத்தத்திற்கு எதிராகப் பரிந்து பேசுவது தான் சாத்தான் வேதம் ஓதுவது போன்று உள்ளது. ஏனெனில், யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசுகளின் தேவைகளை, குறிப்பாக ஆயுத தேவைகளைப் பூர்த்தி செய்யும் நாடாகவும், அந்நாடுகளை யுத்தத்தில் வழிநடத்தும் நாடாகவும் இதுவேயுள்ளது. இந்த வகையில் சிறீலங்கா போன்ற நாடுகள் ஏதோ ஒருவகையில் யுத்தத்திற்கு பயன்படுத்தும் நிதியின் ஒருபகுதி அமெரிக்காவில் இருந்து வந்தது என்பதே யதார்த்தமாக உள்ளது. ★

> இன்று சிறீலங்கா இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ள புல்டோசர்கள், டிரக் வண்டிகள், டிரக்டர் வண்டிகள் என்பனவற்றில் பெருமளவானவை அபிவிருத்தித் தேவைக்கென கொள்வனவு செய்யப்பட்டவையும் அன்பளிப்புச் செய்யப்பட்டவையுமே ஆகும்.

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

**த**மக்கு வெற்றி நிச்சயம் எனக் கூறிச் சந்திரிகா அரசாங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட 'ஜயசிக்குறுய்'. இராணுவ ஆக்கிரமிப்பு. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்கு அத்திவாரமாக மாற்றப்பட்டுள்ளது.

உலக வரலாற்றில் ஹிட்லர் ரஷ்யாவின் மேல் 1941 யூன் 22ம் திகதி முதல் 1944 ஜனவரி 27 வரை நடாத்திய பார்பறோசா படைநடவடிக்கை எவ்வாறு ஹிட்லரால் வெற்றி நிச்சயம் என ஆரம்பிக்கப்பட்டு அவரது தோல்விக்கு காரணமாக மாறியதோ அதேபோல் சந்திரிகாவால் 13.05.97ல் தமிழீழத்தின் மீது தொடங்கப்பட்ட இந்த வெற்றி நிச்சயம் என்ற இராணுவக் குறியீட்டுப் பெயர் கொண்ட ஜயசிக்குறுய் படைநடவடிக்கையும் சந்திரிகாவின் தோல்விக்கு காரணமாக மாறிநிற்கிறது.

ஆம்! ஜயசிக்குறுய் - தமிழீழ விடுதலைக் களத்தின் அதி முக்கிய யுத்தக்களம். இது இரண்டு முக்கிய நோக்கங்களுடன் திட்டமிடப்பட்டது. ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழீழ மக்களை அடிமை கொண்டு விடலாம் என்பது. அடுத்தது தமிழர்தாயகத்தை துண்டாடிவிடலாம் என்னும் துடிப்பு.

யாழ்ப்பாணக்குடா நாட்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தந்திரோபாய பின்வாங்கலையும் 'எடிபல' இராணுவ நடவடிக்கைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்ப்புக் காட்டாமல் விட்டதையும் விடுதலைப்புலி இயக்கத்தினரின் பலவீன நிலை எனத் தப்புக் கணக்கு போட்ட சந்திரிகா குடும்பத்தினர் தாம் புலிகளை ஒடுக்கிய வீர மனிதர்கள் எனச் சிங்கள வரலாற்றில் புகழ் கொள்ள ஒரு பெரும் யுத்தத்தை புலிகள் மேல் தொடுக்க ஆயத்தமாகினர்.

அதற்கு. யாழ்குடா நாட்டில் ஆக்கிரமிப்பு நிலை எடுத்துள்ள சிங்களப் படைகளின் வழங்கல்களையும் இராணுவ வளங்களையும் ஒழுங்கு செய்தலின் தேவை சிறிலங்காவுக்கு முக்கியமானதாயிற்று. அதனை நிறைவுசெய்ய வவுனியாவில் நிலை கொண்டுள்ள சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுடன் யாழ்குடா நாட்டுப் படைகளை இணைப்பதற்கான தரை வழிப்பாதை ஒன்றைத் திறப்பதன் அவசியத்தை சந்திரிகா உணர்ந்தார். இதுவே ஜயசிக்குறுய் நடவடிக்கைக்கான மூலகாரணமாயிற்று.

சிறிலங்காவின் இராணுவ நலன்களை மையப்படுத்தி எடுக்கப்படும் நடவடிக்கைகளை எல்லாம் தமிழர்களின் நலன்பேணும் நடவடிக்கையாக உலகுக்கு அறிவிப்பதில் கைதேர்ந்தவரான சந்திரிகா முன்னர் யாழ்குடா நாடு மீதான அப்பட்டமான ஆக்கிரமிப்பை சமாதானத்திற்கான யுத்தம் எனப் பெயரிட்டதைப் போல இதனையும் பாதை திறப்புக்கான யுத்தம் என உலகுக்கு அறிவித்தார். ஆனாலும். உலகுக்குத்தான் அந்த வேடமே ஒழிய சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கோ புலிகளை தனிமைப்படுத்தி தமிழர் தாயகத்துடன் அவர்கள் தொடர்புகளை மேற்கொள்ளக் கூடிய பாதைகளைத் துண்டித்து தமிழர்களை அடிமை கொள்வதற்கான யுத்தமாகவே இது வெளிப்படுத்தப்பட்டது. இதனால் ஆனந்தமடைந்த பௌத்த பிக்குகள் பிரித் ஓதி ஆசி மழை பொழிய- சோதிடர்கள் வெற்றிக்குப் போர் தொடங்க வேண்டிய சுபமுகூர்த்தம் குறித்துக் கொடுக்க - பெரும் ஆளணி ஆயுத குவிப்புக்களுடன் முதலில் பத்து நாள் பின்னர் மூன்று மாதக் காலக்கெடுவுடன் தொடங்கப்பட்ட பெரும் போர் தான் இந்த 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை.

ஆயினும். தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் மனோவலிமை. விடுதலையின் மேலுள்ள இறுக்கமான பற்று. தேசத்தலைவர் பிரபாகரனின் நுட்பமான வழிநடத்தல். தமிழீழ மக்களின் தேசநேசம் இவைகளின் கூட்டுமொத்தமான செயற்பாட்டால் 'ஜெயசிக்குறுய்' நடவடிக்கை கடந்த ஓராண்டாக வன்னிக்குள் சிங்களப்படைகள் சிக்குண்டு தவிக்கும் சரித்திரமாக மாற்றப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீற்றருக்கு நூறு படையினர் என்ற விகிதத்தில் சிங்களப்படை ஆளணி அழிவுகளைக் கண்டுவருவதாக இராணுவ ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. விடுதலைப் புலிகளின் கணிப்புகளின்படி மூவாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் பலியானதுடன் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர். அதாவது சண்டைக்கு குவிக்கப்பட்ட மூன்று பட்டாலியன்களில் ஒன்று காலியாக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இரண்டும் கூட எத்தனை நாளைக்கு எஞ்சி நிற்க முடியும் என தவித்துக் கொண்டிருக்கின்றன. அதேவேளை. விடுதலைப்புலிகள் தாம் இச்சமர்களில் கைப்பற்றிய பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களின் சக்தியினால் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் தோல்வியை நிச்சயப்படுத்த உறுதி கொண்டு நிற்கின்றனர். அத்துடன் சந்திரிகாவுக்கு பாதைதிறப்பு என்பது அவரின் அரசியல் எதிர்காலத்தை சிங்கள-பௌத்த பேரினவாதிகளிடை நிர்ணயிப்பதற்கான தராசாக அவரின் வாய்ப்பேச்சுக்களால் மாறியுள்ளது. ரத்வத்தைக்கோ காட்டுக்குள் தான் அனுப்பிவிட்டதாக கூறிய புலிகள் தனது படைகளை சுடுகாட்டுக்கு அனுப்பும் யதார்த்தநிலை கண்டு சிங்கள பௌத்த பேரினவாதம் தன்னை நிராகரித்து விடாது தப்புவதற்காக எப்படியும் பாதை திறக்க முயற்சிக்க வேண்டிய இக்கட்டான நிலை. இதனால். தனது சிறிலங்கா படைகளின் முழுப்பலத்தையும் வன்னிக்களத்தில் பயன்படுத்தியும் எதுவும் செய்யமுடியாத அவலநிலையை ஜயசிக்குறுய் தோற்றுவித்துள்ளது. இதனால். எத்தனை சிங்கள இளைஞர்கள் அழிந்தாலும் பரவாயில்லை என வன்னியில் சிங்கள படைகளைக் குவிப்பதும். பின்னர் பொறுக்கி ஏற்றுவதுமாக இருக்கிறார்.

இதனால். ஏற்படும் ஆளணி இழப்புக்களை ஈடு செய்ய எட்டு முறை படையிலிருந்து விலகிச் சென்றவர்களுக்குப் பொது மன்னிப்புக் கொடுத்தும் காரியம் கைகூடாத ஏக்கத்தில் இப்பொழுது கட்டாய இராணுவ சேவை. பள்ளிப்பிள்ளைகளை படையில் சேர்த்தல் என்றெல்லாம் ஏதேதோ வகைகளில் சிங்கள மாணவர்களை. இளைஞர்களை வன்னிக் களத்திற்கு தள்ளத் துடிக்கிறார். நன்கு பயிற்சி பெற்ற நாற்பதாயிரம் படையினரால் இந்த ஓராண்டாக சாதிக்க முடியாத பாதை திறப்பை பள்ளி மாணவர்களைப் படையில் சேர்த்து சாதிப்பதென்பது பைத்தியகாரத்தனமான முயற்சி என சிங்களப் பெற்றோர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு கூறித் தவிக்கின்றனர்.

பார்பறோசா சண்டையில் ஹிட்லர் காட்டிய அதே போக்கு - அதாவது தோல்வி நிச்சயம் எனத் தெரிந்தும் பத்து இலட்சம் ஜேர்மனியர்களை பலியிட்ட அந்தக் கொடுமை மீளவும் சிறிலங்கா அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை உலகு இனங்காண வேண்டும். தமிழர்களை மனித உயிர்களாக மதியாமல் தம் இனவெறிக்குப்- பதவி ஆசைக்குப் பலியாக்கும் சிறிலங்கா சிங்களவர்களையும் தம் பதவி வெறிக்குப் பலியாக்கத் துடிப்பதில் புதுமை ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தை அங்கீகரித்து அதன் மூலம் தமிழர்களுக்கு மட்டுமல்ல முழு இலங்கைத் தீவுக்குமே பாதுகாப்பான அமைதி திரும்ப உலகம் உதவ வேண்டும் என்பதே புலம் பெயர் தமிழீழ மக்கள் சர்வதேசத்தினர் இடம் கேட்கும் ஒரே வேண்டுகோள்.

அதேவேளை. ஜயசிக்குறுய் நடவடிக்கை வெறும் இராணுவ நடவடிக்கை மட்டுமல்ல எங்கள் உயிர்த் தாய் நாட்டின் வட தமிழீழத்தை முக்கூறு போடும் நாசகாரத் திட்டமும்கூட.

**வன்னிக்கிழக்குத் துண்டு** என்னும் முதல் துண்டில் - கிளிநொச்சியின் கிழக்கிலிருந்து. மாங்குளம் முல்லைத்தீவு வரையிலான பகுதிகளைக் குறித்து நிற்கும். பரந்தன். வட்டக்கச்சி போன்ற பகுதிகளும் இப்பகுதிகளுள் அடங்கும். வீதியாகப் பிரிப்பதானால் பரந்தன் - மாங்குளம் வரையிலான கண்டி வீதியும். முல்லைத்தீவு வரையிலான மாங்குளம்- முல்லைத்தீவு வீதியும். பரந்தன்- புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு வீதியும் இப்பகுதியின் எல்லைகளாக இருக்கும். இப் பகுதியினைத் துண்டாடி வன்னிக் கிழக்குப் பகுதியில் வாழும் மக்களை இராணுவ அழுத்தங்களின் ஊடாக வன்னி மேற்குப் பகுதிகளுக்கு நகர்த்தி விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்துவது சிறிலங்காவின் நோக்கு.

**மணலாறு - நெடுங்கேணித் துண்டு** என்னும் இரண்டாவது துண்டில். மணலாற்றிலிருந்து நெடுங்கேணிப் பகுதியுடன் மாங்குளத்திலிருந்து வவனியா வரையிலான கண்டி வீதியின் கிழக்குப்பகுதிகள் அடங்கும். இதனைத் துண்டாடி மணலாற்றுப் பகுதியுடன் நெடுங்கேணியை இணைத்து இதனை அநுராதபுர மாவட்டத்துடன் இணைத்து சிங்கள மயப்படுத்துவது சிறிலங்காவின் திட்டம்.

**வன்னி மேற்குத் துண்டு** என்னும் மூன்றாவது துண்டில் பரந்தன் - வவுனியா வரையிலான கண்டி வீதியின் மேற்குப் புறம் அடங்கும். பரந்தன் - தள்ளாடி- வவுனியா வீதி எல்லைகள் இத்துண்டின் எல்லைகளாக இருக்கும். இவற்றை விட மன்னார் தனித்துண்டாகவும். யாழ்ப்பாணம் வலிகாமம் - தென்மராட்சி - வடமராட்சித் துண்டுகளைக் கொண்டதாகவும் இருக்கும்.

மேலும். இராணுவ நடவடிக்கைகளின் உக்கிரம் காரணமாக வன்னி மேற்குத் துண்டில் தஞ்சமடையும் மக்கள் மீது இராணுவ அழுத்தங்களைப் பிரயோகித்து தள்ளாடி - மன்னார் வீதியூடாக அவர்களை வன்னி மேற்குப் பகுதியில் இருந்து வெளியேற்றுவது என்பது ஜயசிக்குறுயின் ஒரு முக்கிய நோக்கு. இவ்வாறு வெளியகற்றப்படும் மக்களில் யாழ்குடா நாட்டைச் சேர்ந்தவர்களை அங்கே அனுப்பி விட்டு வன்னிப் பெருநிலப் பரப்பு மக்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொண்டு செல்வது என்பதே சிறிலங்காவின் திட்டம்.

வவுனியா- கிளி நொச்சிப் பாதைத்திறப்பு என்பது வன்னிப்பெரு நிலத்தை இவ்வாறு மூன்றாகத் துண்டாடுவதையே குறித்து நிற்கின்றது. இவ்வாறு துண்டாடப்பட்ட பின்னர் வன்னிப் பெருநிலத்தின் கட்டுப்பாடு இராணுவத் துணைப்படை கொண்டு நிரவகிக்கப்பட்டு அடர்காடுகளுள் உள்ள விடுதலைப் புலிகளுக்கான விநியோகங்களை மட்டுப்படுத்தி தாழ்நிலை யுத்தத்தினை ( டூழற ஐவெநளௌைந ஙயசகயசந) விடுதலைப் புலிகள் நடாத்தக் கூடிய வகையில் அவர்களை பலவீனப்படுத்துவதே சிறிலங்காவின் பெருநோக்கு. இந்நோக்கு நிறைவேறி பிரதான வீதியின் இருமருங்கும் இராணுவக் கட்டுப்பாடு செறிவு பெற்றால் பிரதான விநியோகப் பாதை தொடர்ந்து பேணப்பட்டு வடதமிழீழம் முழுவதும் சிறிலங்காவின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வீழ்ந்துவிடும் என்பதே சிறிலங்காவின் பகற்கனவு.

எனவே ஜயசிக்குறுய் மீது எத்தனை அடிவிழுந்தாலும் அதனை சிறிலங்கா கைவிடப் போவதில்லை. ஆகவே. தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையை தமிழீழ மக்களாகிய நாம் மேலும் மேலும் பலப்படுத்துவதன் மூலம் மட்டுமே நமது உயிரிலும் மேலான தாயகம் பல கூறுகளாகப் பிரிக்கப்படுவதைத் தடுக்க முடியும். இதற்கு உதவ - உச்சமான அளவு இயலுமானதைச் செய்ய - 'ஜயசிக்குறுய்' இனை ஓராண்டு காலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் முறியடித்து நிற்கும் இந்நேரத்தில் உறுதி பூணுவோமாக!

அன்பின் ஆசிரியர்.


**நேர்த்தியான இயக்கம் - பிரமிப்பூட்டும் படப்பிடிப்பு**

**மீண்டுமோர் தமிழீழத் திரைப்படம்**

# தேசத்தின் புயல்கள்

**30 . 05 . 98 சனிக்கிழமை**
**மாலை 6.00 மணி, 9.00 மணி**
ESPACE CINEMA - Aubervilliers Quatre Chemins.
M°. Quatre Chemins

**31 . 05 . 98**
**ஞாயிற்றுக்கிழமை**
**பிற்பகல் 3.00 மணி, 6.00 மணி , 9.00 மணி**
LE TRIANON
80. Bld Rochechourat
75018 Paris
M°. Anvers

**வீரம் விளையும் மண்ணில் விளைந்த உயிர்க்காவியம்**

www.tamilarangam.net



# சகாப்தம் படைத்த ஸ்ராலின்கிராட் 5



மார்ஷல் சுயிக்கோவ்

> "விடை கொடுங்கள் தோழர்களே, எங்களை மறக்காதீர்கள்!"என்ற குரல் கேட்டது. பின்னர் "மாபெரும் தாயகமே துள்ளியெழு, ஜீவமரணப் போராட்டத்திற்குத் துள்ளியெழு" என்ற பாடல் கேட்க ஆரம்பித்தது.

இளம் போர் வீரர்களும், கமாண்டர்களும் கடினமான சண்டைகளில் பொறுமையிலும் ஆண்மையிலும் வீரத்திலும் முதிய போர்வீரர்களுக்கு எந்தவிதத்திலும் குறையாதவர்களாக இருந்ததைக் காண அனுபவமிக்க பழைய போர் வீரர்களாகிய எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. சோவியத் இளைஞர்கள் முதிய தலைமுறையின் வீரம் செறிந்த பாரம்பரியங்களை தொடர்ந்தது மட்டுமன்றி இப்பாரம்பரியங்களை மேலும் செழுமைப் படுத்தியதைக் கண்டு நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

அக்கினியும் குருதியும் வைத்த கடினமான சோதனையை கம்சமோல் உறுப்பினர்கள் கௌரவத்தோடு வென்றனர். அவர்கள் புடம்போட்டு எடுக்கப்பட்டனர். அவர்கள் போர்க் கலையை எதிரியை வெல்லும் கலையைக் கற்றனர்.

மிகக் கடுமையான சண்டையின்போது புகைவண்டி நிலையப் பிரதேசத்தில் இருந்த ரதீம்த்செவ் டிவிசனின் துப்பாக்கிப்படை கம்பனிகளில் ஒன்றை எதிரி டாங்கிகள் தாக்கின. கம்பனியில் குழப்பம் ஏற்பட்டது. ஆனால், கம்சமோல் ஸ்தாபனச்செயலாளர் ஃபியோதர் யாக்கவ்லெவ் கலங்கவில்லை. இரண்டு டாங்கி எதிர்ப்பு எறிகுண்டுகளை எடுத்துக்கொண்டு அவர் "ஓரடிகூட பின் செல்லக்கூடாது தோழர்களே" என்று கோஷமிட்டபடியே ஒரு எறிகுண்டை முதலில் வந்த டாங்கியின் மீது வீசினார். டாங்கி பற்றி எரிந்தது. யாக்கவ்லெவ் 2வது எறிகுண்டையும் எறியத் தயாரானபோது எதிரியின் குண்டு அவர் உடலைத் துளைத்தது. யாக்கவ்லெவ்வின் உதாரணத்தால் உந்தித் தள்ளப்பட்ட போர் வீரர்கள் பாசிஸ்டுகளின் தாக்குதலை முறியடித்தனர். சண்டைக்குப்பின் வீரர்கள் யாக்கவ்லெவ்வின் பேழையில் அவரே கைப்பட எழுதிய ஒரு தாளைக் கண்டெடுத்தனர். தனது எழிய ஆனால், நெஞ்சார்ந்த சிறு கவிதைக்கு அந்தக் கம்சமோல் வீரன் "எனது சபதம்" என்று பெயரிட்டு இருந்தான்.

*கட்சியின் புதல்வன் நான்,*  
*தாயகம் என் தாய்,*  
*நமக்குப் பிடித்த லெனின்*  
*என் தந்தை.*  
*சண்டையில் பின்*  
*செல்லமாட்டேன் நான்.*  
*எல்லோரும் அறியட்டும் இதை.*

விமான நிலையக் குடியிருப்பு அருகே ஹசான் யம்பெத்கவ் தலைமையில் சென்ற ஒரு சோவியத் டாங்கியை 8 பாசிச டாங்கிகள் தாக்கின. அவர் அவற்றை எதிர்கொண்டு 4 டாங்கிகளை அழித்தார். ஆனால், யம்பேக்காவின் டாங்கியில் அதிவெப்ப குண்டு விழுந்து அது எரிந்தது. தானியங்கித் துப்பாக்கி ஏந்திய பாசிஸ்டுகள் அதைச் சுற்றிவளைத்து சோவியத் டாங்கி வீரர்கள் எப்போது வருவார்களென காத்திருந்தனர். ஆனால், சோவியத் போர்வீரர்களோ சரணடைவதில்லையென முடிவு செய்து, கடைசிக் குண்டும் தோட்டாவும் இருக்கும் வரை சண்டையிட்டனர். நெருப்பும், புகையும் சோவியத் டாங்கி வீரர்கள் உள்ளே அமர்ந்திருந்த இடத்தை நெருங்கியதும், எங்களுடைய டாங்கி பிரிவின் டியூட்டி ஆப்பரேட்டர், டாங்கி கமாண்டர் யம்பேக்காவின் பழக்கமான குரலைக் கேட்டார். "விடை கொடுங்கள் தோழர்களே, எங்களை மறக்காதீர்கள்!" என்ற குரல் கேட்டது. பின்னர் "மாபெரும் தாயகமே துள்ளியெழு, ஜீவமரணப் போராட்டத்திற்குத் துள்ளியெழு" என்ற பாடல் கேட்க ஆரம்பித்தது. சோவியத் டாங்கி வீரர்கள்தான் அப்பாடலைப் பாடினர். சோவியத் போர்வீரர்கள் – ஹசான் யம்பேக்கவும், மெக்கானிக் – வண்டியோட்டி அந்திரேய் தரபானவும், கம்பியில்லாத் தொலைபேசி ஆப்பரேடர் வசீலிமுஷலவும் பீரங்கி கமாண்டர் செர்கேய் ஃபெதேன்கோவும் – பெருமிதத்தோடு, வீரத்தோடு இன்னுயிர் ஈந்தனர்.

லெனினிய கம்சமோலால் பயிற்றுவிக்கப்பட்டு சோவியத் நாடு பூராவுமிருந்து வோல்கா "கோட்டையின்" சுவர்களுக்கு வந்தவர்கள், தாம் சோஷலிசத் தாயகத்தின் பெருமை மிகு புதல்வர்கள் என்று காட்டினர்.



பிரபல "பாவ்லவ் வீட்டின்" "எஜமானனாய்" திகழ்ந்த இளம் சார்ஜன்ட் யாக்கவ் பாவ்லவும், மோக்ரயா மெச்சேத்தா அருகே நடந்த சண்டையின் கதாநாயகன் இளம் லெப்டினன்ட் திமஃபேய் சிமாஷ்கோவும் நினைவிற்கு வருகின்றனர். கம்சமோல் உறுப்பினர்களாயிருந்த போர்வீரர்கள் எதிரி அஞ்சி நடுங்கிய, பிரபல தாக்குதல் குழுக்களின் முதுகெலும்பாயிருந்தனர். இக்குழுக்கள் தெருச் சண்டைகளில் பெரும் பங்காற்றினர்.

போர்க்களத்தில் கண்டெடுக்கப்பட்ட குருதி படிந்த கம்சமோல் உறுப்பினர் அட்டைகள் இன்று புனிதமான நினைவுச் சின்னங்களாகப் பேணிக் காக்கப்படுகின்றன.

இதோ உறுப்பினர் அட்டை நம்பர் 1,31,45,761. அதைக் குண்டு துளைத்தது. சராத்தவ் நகரத்தைச் சேர்ந்த 19 வயது போர்வீரன் நிக்கலாய் பாதுஸின் இந்த உறுப்பினர் அட்டையோடு தாக்குதலில் இறங்கினான். அவன் வீரமரணமடைந்தான். இதோ ஓரங்களில் எல்லாம் எரிந்து கருகிய இன்னொரு கம்சமோல் உறுப்பினர் அட்டை. அது உக்ரேனிய டாங்கி வீரன் பியோத்தர் விளாசென்கோவுக்கு சொந்தமாயிருந்தது. இறப்பதற்கு ஒருசில நாட்கள் முன்தான் இந்த இளைஞன் கம்சமோலில் சேர்ந்தான். இந்த உறுப்பினர் அட்டை போர்க்களத்தில் வழங்கப்பட்டது. தன்னுடைய டாங்கி பற்றியெரிந்த போது கடைசிவாய்ப்பு உள்ளவரை இவன் எதிரியோடு கடுமையாக சண்டைமிட்டான். இவனுடைய டாங்கியைச் சுற்றி பல டஜன் பாஸிஸ்டுகளின் பிணங்கள் கிடந்தன.

இதோ குண்டுகள் துளைத்த வசீலி பூத்தெவ், அலெக்சாந்தர் ஒலேனிச்சேவின் உறுப்பினர் அட்டைகள். டீராக்டர் தொழிற்சாலையில் தானியங்கி துப்பாக்கி யேந்திய பாஸிஸ்டுகள் ஒளிந்து கொண்ட போது, தொழிற்சாலையைத் தாக்கிய துருப்புக்களின் முதல் வரிசைகளில் இருந்த இவர்கள் இருவரும் த்ஸர்ஸீன்ஸ்கி சதுக்கத்தில் மாண்டனர்.

வோல்காவின் கரையில் சண்டைகள் நடந்தபோது, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ரெஜிமெண்டுகள், பாட்டாலியன்கள், கம்பெனிகள், ஸ்குவார்ட்ரன்களில் கமாண்டர்களானார்கள். இளம் படைத்தலைமைத் துருப்புக்களை ஒன்றிணைத்து, நெருங்கிவரச் செய்தது. அவர்கள் கம்சமோலால் பயிற்றுவிக்கப்பட்ட இளம் கம்யூனிஸ்டுகளாக இருந்தனர். உலகம் முழுவதையும் வியப்பில் ஆழ்த்திய இந்த முன் பின் காணா வீரமும் நெஞ்சுறுதியும் எங்கிருந்து வந்தன?

சோவியத் இளைஞர்களின் உயரிய தார்மீகப் பண்புகளாகிய வீரமும் உறுதியும் போல்ஷிவிக் கட்சியின் பாரம்பரியங்களால் வளர்க்கப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டங்களின் நிறைவேற்றத்தின் போது, தினேப்பர் நீர் மின்நிலையக் கட்டுமானம், அமூர் ஆற்றின் மீதான கம்சமோல்ஸ்க் கட்டுமானம், வோல்கா, யூரால், உக்ரேய்ன், சைபீரியா ஆகிய இடங்களிலும் வடக்கிலும் தெற்கிலும் உள்ள தொழிற்சாலைகள் ஆகியவற்றில் தன்னலமற்று உழைத்த போது இவை உருவாயின.

எல்லோருக்கும் முன்னால் நிற்பது, எல்லோரையும்விட கடுமையாகப் போரிடுவது என்னும் ஒரேயொரு சலுகைதான் 62வது படையின் கம்யூனிஸ்டுகளுக்கும் கம்சமோல் உறுப்பினர்களுக்கும் இருந்தது.

ஆழ்ந்து சிந்திக்கப்பட்ட, இடையறா கட்சி அரசியல் பணியின் பயனாய் தோழமை ரீதியான போர்க்கள ஒற்றுமை உருவானது. போர்வீரர்கள் தம் கமான்டர்களை நேசித்தனர், மதித்தனர், அவர்களைப் பேணிக்காத்துப் பாதுகாத்தனர். எப்போதும் போர் வீரர்களோடு இருந்த கமாண்டர்கள் தாமும் ஆயுதமேந்திப் போராடினர். இத்தகைய போர்க்கள நட்பு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வலுப்படுத்தியது.

தாயகத்தின் மற்ற பகுதிகளிலிருந்து நெருப்பாலும் தண்ணீராலும் துண்டிக்கப்பட்ட நாங்கள், இதயத்தாலும் மனதாலும் சோவியத் மக்கள் அனைவருடனும் இணைக்கப்பட்டிருந்தோம். எங்களைப் பற்றிய அக்கறையை எப்போதும் உணர்ந்தோம். ஒருநாள் கூட நாடு எங்களை மறக்கவில்லை: ஆயுதத் தளபாடங்கள், குண்டுகளோடுகூட கடிதங்கள், பார்சல்கள், தந்திகள் எங்களுக்கு வந்த வண்ணமிருந்தன. இந்த அக்கறை 62வது படையின் போர்வீரர்களை புதிய தியாகங்களுக்கு ஊக்குவித்தது. தம் செயல்கள் மக்களின் நினைவில் என்றென்றும் நிலைத்திருக்குமென போர்வீரர்கள் அறிந்திருந்தனர்.

ஆம். அவை அப்படியே நிலைத்திருக்கின்றன!

ஸ்டாலின்கிராடின் பாதுகாவலர்களுக்கு மமாயெவ் குன்றில் ஒரு மாபெரும் நினைவாலயம் எழுப்பப்பட்டுள்ளது.

**தொடரும்.....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என்றும் வணங்காத எங்கள் மண் இணங்காது இராணுவத் தீர்வுக்கு

வணங்கா மண் என்று வரலாற்றுப் பெயர் கொண்ட வன்னி மண்ணில் நின்று எங்கள் தமிழீழ மக்கள் இராணுவமாம் தமிழீழ விடுதலைப் புலிகள் வெற்றிச்சங்கு ஊதி நிற்கும் காட்சி கண்டு தமிழீழப் புலம் பெயர் மக்கள் இறும்பூதெய்தி நிற்கின்றனர்.


ஆம்! இவ் வைகாசி மாதம் 13ம் திகதியுடன் சந்திரிகா அரசினால் 'ஜெயசிக்குறுய்' இராணுவ ஆக்கிரமிப்பு ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தி யாகிவிட்டது. பெரும் ஆர்ப்பரிப்பு க்களுடன் பெரும் இராணுவ ஆளணி ஆயுதக் குவிப்புக்களுடன் பாதை திறப்பு என உலகுக்கு ஒரு கோஷமும், புலிகளின் பலத்தினை அழிக்கும் நடவடிக்கை என சிங்கள மக்களுக்கு ஒரு வேஷமும் போட்டு சந்திரிகா ரத்வத்தை குடும்பத்தால் சோதிடர்கள் குறித்துக் கொடுத்த சுப முகூர்த்தத்தில் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதனைக் கண்டு பௌத்தபிக்குகள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து இரவு இரவாய் 'பிரித்' ஓதி ஆசிமழை பொழிந்து படைகளை வன்னிக்களம் அனுப்பி வைத்தனர். படையா அது....! ஒரு பெரும் சிங்களச்சேனை ஒன்று தமிழர் இரத்தம் குடிக்கவென கடல் போல் பொங்கி வந்தது. சிறிலங்காவின் ஆயுதப்படைகளில் மூன்றில் ஒன்று வன்னிப்பிரதேசத்தில் கால்பதித்தது. முதலில் ஒன்பதினாயிரம் சிங்களப் படைகளைக் கொண்ட இரண்டு பட்டாலியன்கள் களம்புகுந்தன. அதுவும் போதாதென்று இன்னொரு ஒன்பதி னாயிரம் பட்டாளம் சேர்ந்து கொண்டது. கூடவே உளவுப்படை, பொலிஸ்படை, கடற்படை, விமானப்படை என அணியணியாக துணைப்படைகள் வன்னித்திரு மண்ணில் குவிக்கப்பட்டன. நவீன போராயுதங்கள் புதிய இராணுவத் தளவாடங்கள் வன்னியில் கொட்டப் பட்டன. கடுங்காவல் கொண்ட ஆயுதக்குதங்கள் விநியோக நிலையங்கள் நுட்பமான திட்டங்களுடன் அமைக் கப்பட்டன. டாங்கிகளும் பீரங்கிகளும் விமானங்களும் வன்னி மண்ணையும் விண்ணையும் வலம் வந்தன. பத்திரிகைகள் போர் முரசம் கொட்டின. தொலைந்தனர் புலிகள் முடிந்தது தமிழர் விடுதலை வரலாறு என பந்திபந்தியாக கட்டம் போட்டு கொட்டை எழுத்துக்களில் செய்திகளைக் கொட்டி மகிழ்ந்தன. பத்திரிகைகளுடன் போட்டி போட்டு சிறிலங்காவின் ஒலி -ஒளிபரப்பு சாதனங்களும் புலிகள் சரித்திரமே முடிந்தது என உலகெல்லாம் செய்தி பரப்பின. தன் மாமானின் இராணுவ த்தால் புலிகளை அடக்கி தனது அரசியல் தீர்வுப் பொதியினால் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கண்டிடப் போகும் சாமர்த்தியசாலியாக சந்திரிகா உலகுக்குத் தன்னை வெளிப்படுத்த, வந்தாளே! மகராசி தந்தாளே தமிழருக்குத் தீர்வு!! என தமிழனாகத் தப்பிப் பிறந்த கதிர்காமர் ஊரெல்லாம் உடுக்கடித்து பொய்மையை உண்மை யாக்க, சாதகமான அரசியல் இராணுவச்

சூழ்நிலைகளுடன் 'ஜயசிக்குறுய்' என்னும் பெயரில் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் வன்னித் திருமண்ணில் ஆக்கிரமிப்பை ஆரம்பித்தனர். சந்திரிகா தனக்கு இருந்த சாதகநிலை கண்டு மகிழ்ந்து, தன் கணவன் விஜயகுமாரணதுங்கா கதா நாயகனாக நடித்த சினிமாப்படம் ஒன்றின் தலைப்பான 'வெற்றி நிச்சயம்' என்ற பொருள்படும் 'ஜயசிக்குறுய்' என்னும் பெயரை இவ் இராணுவ நட வடிக்கைக்குச் சூட்டி சிங்களப் பேரினவாதிகளின் கைதட்டல்களை தனதாக்கிக் கொள்ள முனைந்தாள்.

இராணுவ நடவடிக்கை. தொடங்கி முதல் ஐந்து நாளும் விடுதலைப் புலிகள் எதுவித எதிர்ப்பும் காட்டவில்லை. இதனால் வீழ்ந்தது வன்னி என்ற எண்ணத்துடன் சிங்களப்படைகள் சில கிலோ மீற்றர்கள் முன்னேறின. தாண்டிக்குளம் பகுதியி லிருந்து ஓமந்தையின் எல்லையை நோக்கி படையினர் முன்னேறிய நிலையில் ரத்வத்தை ஆகாயக்கோட்டை கட்டினார். ஆனால், அவரின் கனவு சில நாட்கள் கூட நீடிக்கவில்லை. 18.05.97 அன்று முதலாவது புலிப்பாய்ச்சலுக்குள் சிங்களப்படைகள் சிக்கின. தொடர்ந்து

20ம் நாள் 09.06.97 ல் நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் பகுதிகளில் விடுதலைப் புலிகள் தொடுத்த அதிரடித்தாக்குதலில் ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்கு மூலபலமாக விளங்கிய இரண்டு ஆயுதக் குதங்கள் அழிக்கப்பட்டதுடன் நான்கு தாங்கிகளும் முன்னூறுக்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினரும் அழிவுண்டனர். மேலும், ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிறீலங்கா படையினர் காயமடைந்தனர். ஆட்டிலறிகள் இரண்டும் ஒரு துருப்புக்காவியும் விடுதலைப் புலிகள் வசமாகியது. நொச்சிமோட்டை-தாண்டிக்குளம் பகுதிக்கு முன்னோக்கி நகர்ந்திருந்த படையினரின் வால் துண்டிக்கப்பட்டது. படைகளின் தொடர்புகள் சிலமணி நேரங்களுக்குப் பாதிக்கப்பட்டதினால் படையினர் அதிர்ந்து போயினர். ஆயினும், சிங்களப் பேரினவாதிகள் போர்த் தந்திரோபாய அடியாக இதைக் கருதாது 'தலைமீது தாக்குவதற்குச் சக்தியற்றவர்களாக வால்மீது தாக்குகிறார்கள்' என பரப்புரை செய்து மகிழ்ந்தனர்.

ஆனால், அவர்கள் பரப்புரையின் உண்மைக்கு மாறான நிலையை உலகுக்கு உணர்த்தும் தாக்குதலாக, தாக்குதல் நடாத்தப்பட்டு 16ம் நாள் 25.06.97 அன்று விடுதலைப் புலிகள்



ஒன்றும் அழிவுற்றது. பலகோடி பெறுமதியான ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் அள்ளிச் செல்லப் பட்டது. இந்த ஓமந்தை இராணுவக் கட்டளைத் தலைமையகத் தகர்ப்பு வெற்றிநிச்சயம் இராணுவ நட வடிக்கையின் இதயத்தில் வீழ்ந்த அடி என இராணுவ ஆய் வாளர்களால் வர்ணிப்புப் பெற்றது. 95 விடுதலைப் புலிகள் இத்தாக்குதலில் வீரச்சாவுற்றனர். ஜயசிக்குறுய் இன் தரை நகர்வு ஓமந்தை-ரம்பைக்குளம் பகுதியு டன் தடுக்கப்பட்டது.

தொடர்ந்து ஆடியில் 06.07.97 ல் நெடுங்கேணிப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 30 படையினரைப் பறிகொடுத்த படையினர் 60 படையினரைக் காயமுற்ற நிலையில் தூக்கிச் சென்றனர்.

ஆவணி பிறந்ததுமே 01.08.97 இல் ஓமந்தை-ரம்பைக்குளம் பகுதியினை ஆக்கிரமித்து நின்ற சிறிலங்காப் படையினர் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் தொடுத்தனர். 135 படையினர் அழிக்கப்பட 40 படையினர் காயமுற்றனர். கனரக ஆயுதங்கள் புலிகள் வசமாகின. விடுதலைப் புலிகளில் 126 போராளிகள் வீரச்சாவெய்தினர். சிறிலங்கா தனது படைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்புக்களை வெளிக்காட்டாது விடுதலைப் புலிகளுக்கே அதிக இழப்பு என நாடகமாடியது.

இந்த நாடகத்தின் திரை 19.08.97 இல் புளியங்குளம் புறநகர்ப் பகுதியில் சிறிலங்காவின் 53வது 55வது படைப்பிரிவின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலுடன் கிழித்தெறியப்பட்டது. பத்து அதிகாரிகள் உட்பட 200க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட 500க்கும் மேற்பட்ட படையினர் காயமுற்றனர். T55 ரகத் தாங்கிகள் ஆறு புலிகளால் அழிக்கப்பட்டது. இந்நிலையில் ஆவணி மாதம் முழுவதும் புளியங்குளம் சந்தியைக் கைப்பற்ற சிறீலங்கா இராணுவம் எடுத்த முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

08.09.97இல் ஜயசிக்குறுய் ஆரம்பமாகி 125 நாள் . ஆயினும் 1700 படையினரைப் பலிகொடுத்து 4000

## ஜயசிக்குறுய் ஆக்கிரமிப்பு சிங்களத்துக்கே கேடாகி நிற்கிறது

ஐந்து நாட்கள் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடாத்தினர். சுமார் முன்னூறு படையினரின் உயிரிழப்புடனும் அறுநூறு படையினரின் காயங்களுடனும் ஐந்து டாங்கிகளையும் பறிகொடுத்து சிங்களப்படை தடுமாறியது.

இத்தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து விடுபடுவதற்கிடையில் அதாவது, முதலாவது தாக்குதல் நிகழ்த்தப்பட்டு

'ஜயசிக்குறுய்' இன் தலைப்பகுதி மீது நடாத்திய 'ஓமந்தை சிறீலங்கா இராணுவக கட்டளைத் தலைமையகத் தகர்ப்பு' சிறீலங்காவுக்கு 230 க்கும் மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்து 450க்கும் மேற்பட்ட படையினரைக் காயமடையவைத்தது. நாலு ஆட்டில றிகளைப் புலிகள் வசமாக்கிய இத்தாக்குதலில் எம். ஐ. 24 ஹெலி

படையினர் காயங்களால் களத்திலிருந்து விலகிய நிலையில் 12 கி.மீற்றர் மட்டுமே முன்னேறிய நிலையில் காணப்பட்டனர். இதனை ஈடுசெய்ய சிறீலங்கா தனது திட்டங்களில் மாற்றங்களை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதனால் புளியங்குளத்தின் சுற்றுப் புறங்களைக் கைப்பற்றிய நிலையிலிருந்த சிறீலங்காப் படையினர் தமது

www.tamilarangam.net



# என்றும் வணங்காத .......

திட்டமிடுதலில் மாற்றங்கள் செய்து பிரதான வீதி வழியாக நகர்வதற்குப் பதிலாக உட்பக்க நகர்வுகளை ஆரம்பித்தனர்.

14.09.97 இல் புளியங்குளம் புறநகர்ப் பகுதியில் ஏற்பட்ட கடுஞ்சண்டையில் 44 படையினர் அழிக்கப்பட 250க்கு மேல் காயமுற்றனர். விடுதலைப் புலிகள் தரப்பில் 13 போராளிகள் வீரச்சாவுற்றனர். மறுநாள் 15.09.97 இல் புதூர் பகுதியில் முன்னேற முயன்ற இராணுவத்தை விரட்டியடித்த புலிகள் 20 படையினரை அழித்தனர். விடுதலைப் புலிகள் ஐவர் வீரமரணம் எய்தினர்.

கண்டி வீதியின் இருமருங்கினூடாகவும் உட்பக்க நகர்வுகளூடாக கனகராயன்குளச் சந்தியையோ அல்லது புளியங்குளம் சந்தியையோ அடையும் முயற்சியில் A9 எனப்படும் கண்டி வீதியின் கிழக்கு வழியாக கரிப்பட்ட முறிப்பு ஒலு வமடுப்பகுதிகளை நோக்கி சிறீலங்கா முன்னேற்றங்களைத் தொடங்கியது.


05.10.97ல் புளியங்குளத்தைத் தவிர்த்து கரிப்பட்டமுறிப்பு கற்கிண்டி முனையூடாக முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதல் நடாத்தியதில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட இரு நூற்றுக்கு மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் . 72 விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவுற்றனர். மறுநாள் 06.10.97இல் பெரிய மடுப்பகுதியில் மூண்ட சண்டையில் 20 படையினரைக் கொன்ற விடுதலைப் புலிகள் பெரிய மடுச் சந்திக்கப்பால் இராணுவத்தை விரட்டியடித்தனர். தொடர்ந்து அடுத்த நாள் 07.10.97 இல் விக்னன் குளம் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் அடம்பன் வரை இராணுவம் விரட்டியடிக்கப்பட்டது. மறுநாள் 08.10.97இல் கரிப்பட்டு முறிப்புப் பகுதியில் 4 உயர் அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட படையினரை அழித்த விடுதலைப் புலிகள் இரு நூற்றுக்கும் மேற்பட்ட படையினரைக் காயப்படுத்தினர். கொல்லப்பட்டவர்களில் 25 பேரின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சிறீலங்காவிடம் கையளிக்கப்பட்டது. இச்சமரில் இரண்டு ஆயுதக்களஞ்சியங்கள் விடுதலைப் புலிகள் வசமாகியது. அக்டோபர் மாதத்தில் மட்டும் ஜயசிக்குறுய் விடுதலைப் புலிகளின் 5 மரபு வழி மற்றும் கரந்தடித் தாக்குதல்களுக்கு உள்ளாகியது. இதனால், இம்மாதத்தில் மட்டும் . 400 படையினர் அழிக் கப்பட்டதுடன் 1000 படையினர் காயமுற்றனர். இம்மாதத்தில் மட்டும் விடுதலைப் புலிகளினால் 32 இராணுவ வாகனங்கள் 36 மோட்டார்கள் 10000க்கும் மேற்பட்ட எறிகணைகள் உட்பட நூறு மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுத தளவாடங்கள் விடுதலைப் புலிகள் வசமாகின.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் நிலைகுலைந்த சிறீலங்காப் படையினருக்கு புத்துணர்ச்சி கொடுத்து ஜயசிக்குறுய் 16.11.1997ல் தொடங்கப்பட்டது. மும்முனைத் தாக்குதல்கள் கனகராயன் குளம், புளியங்குளம், கிளிநொச்சி ஆகிய

**வூ.பற்றிமாகரன்**

இடங்களில் தொடுக்கப்பட்டன. புளியங்குளச் சண்டையில் 19 இராணுவக் கொமாண்டோக்கள் அழிக்கப்பட்டதுடன் 75 படையினர் காயமடைந்தனர். மேலும், 27.11.97 இல் கனகராயன்குளப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்கினர்.

97ம் ஆண்டின் இறுதித்தாக்குதலாக 04.12.97 இல் விடுதலைப் புலிகள் மன்னன்குளம், கனகராயன் குளம் பகுதிகளில் நடாத்திய பாரிய தாக்குதல் அமைந்தது. 300 விசேட இராணுவக் கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் 400 படையினர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலில் கனரக ஆயுதங்கள் பெருமளவில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. 133 படையினரின் சடலங்களை கைப்பற்றிய விடுதலைப் புலிகள் சிதைவடையாது இருந்த 113 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர். தமிழீழ



விடுதலைப் புலிகள் தரப்பில் 35 போராளிகள் வீரமரணம் எய்தினர்.

1998ம் ஆண்டு பிறந்து நாலு நாட்களில் 04.01.98 இல் ஒலுமடு இராணுவ நிலையுள் ஊடுருவி தாக்குதல் நடாத்தப்பட்டது. MI 17 உலங்கு வானூர்தி தகர்த்து அழிக்கப்பட்டது. ஜயசிக்குறுய் களநிலை தள்ளாடுவதைக் கண்ட சிறீலங்கா 26.01.98 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்தது.

மாசி 02ம் நாள் கிளிநொச்சி பரந்தன் இராணுவ வலயம் தகர்ப்பு, இயக்கச்சி ஆட்டிலறித் தளம் அழிப்பு, ஆனைமிறவு இராணுவத் தளத்தில் ஊடுருவித் தாக்குதல் மூலம் பிரதான தொலை தொடர்பு கோபுரம் தகர்ப்பு என்பன இடம் பெற்று 400க்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர். 250 க்கும் மேற்பட்ட படையினர் காய மடைந்தனர். இச்சமரின் இறுதியில் கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் மீளவும் கொண்டு வரப்பட்டது. 150 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

மாங்குளத்தை கைப்பற்றும் முயற்சியில் 23.02.98ல் சிறீலங்கா மீண்டும் இறங்கியதை அடுத்து விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை தொடுத்தனர். மீளவும் 02.03.98ல் மாங்குளம் புறநகர்ப் பகுதியில் பீரங்கிச்சமர் விடுதலைப் புலிகளினால் நடாத்தப்பட்டது. இரு தினங்களின் பின் 04.03.98 ல் நயினாமடுவில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலில் 15 படையினர் பலியானதுடன் இரண்டு இராணுவ வாகனங்களும் தகர்க்கப்பட்டன.

16.03.98 இல் மாங்குளத்தைக் கைப்பற்ற மும்முனைகளில் தாக்குதல் முயற்சிகளில் சிறீலங்கா இறங்கியதும் விடுதலைப் புலிகள் சரமாரியான பீரங்கித் தாக்குதல்களை ஆரம்பித்தனர். இதனால் அரச பீரங்கிப்படைத் தளபதி உட்பட 22 படையினர் கொல்லப்பட்டதுடன் சிறீ லங்காவின் பிரதான தளபதி உட்பட 109 பேர் காயமுற்றனர். ஒலுமடு முனையில் 18 படையினர் அழிக்கப்பட்டனர். தலைமைக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சரத் பொன்சேகா பிரதித் தளபதி டீ. டபிள்யூ. போக்றான் உட்பட 72 பேர் படு காயமடைந்தனர். உத்தராயங்குளம் முனையில் கெமுனு கண்காணிப்பு படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் கப்டன் தரத்திலான இருவர் கொல்லப்பட்டனர். 12 படையினர் படுகாயப்படுத்தப்பட்டனர்.

20.04.98 இல் மீண்டும் மாங்குளம் நோக்கிய மும்முனை நகர்வை சிறிலங்கா முயற்சித்தது. முதலில் கனரக வாகனங்கள் நகரத்தொடங்கின. அதே சமயம் 56வது படைப்பிரிவினரும் ஐந்து இடங்கள் ஊடாக வெளியேறி விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண்களைத் தாக்கத் தொடங்கினர். காலை ஏழு மணியளவில் சண்டை உக்கிரமடைந்தது. இச்சமயம் 53ம் படைப்பிரிவைச் சேர்ந்த கொமாண்டோ அணியினர் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு வலயத்தைத் தாக்கத் தொடங்கினர். மோட்டார்த் தாக்குதலினால் விடுதலைப் புலிகள் பதிலடி கொடுக்கத் தொடங்கியதும் குறித்த இலக்கை அடைய முடியாமல் தடுமாறத் தொடங்கியது சிறீலங்காப்படை. பிரதான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கனரக வாகனப்படைப்பிரிவு ஒலுமடு காட்டிலாகா சுற்றுலா விடுதியை நெருங்கியதும் அங்கே நிலை யெடுக்காதவாறு விடுதலைப் புலிகளின் மோட்டார்கள் சரமாரியாக விழத் தொடங்கின. இதனால், இரு யுத்தத் தாங்கிகள் தீப்பிடித்து எரியத் தொடங்கின. தாக்குதல்களின் போக்கு மாறத் தொ்டங்கி விட்டதை உணர்ந்த சிறீலங்கா இராணுவப் பிரிவின் பொறியியல் துறையின் பொறுப்பாளரான மேஜர் சந்திம குணரத்தின சேதமடைந்த இரு வேறு தாங்கிகளையும் இழுத்துக் கொண்டு பின்வாங்க முயற்சித்த வேளை விடுதலைப் புலிகளின் தாக்குதல் களுக்கு இலக்காகினார். கப்டன் சிதுமின தருமரத்தினா கொல்லப்பட்டார். மதியம் 12.30 மணியளவில் விமானப் படையின் துணை கோரப்பட்டது. ஆனால், உதவிக்கு விரைந்த எம்.ஐ.24 உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகியது. காய மடைந்த விமானியுடன் சேதமடைந்த விமானம் திரும்பிச் சென்றது. இதேவேளை ஒலுமடு நகரின் கீழ்ப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு வலயத்தை தாக்க முயன்ற 53வது படைப் பிரிவின் அதிகாரி லெப்டினன்ட் ராஜபக்ஸாவும் பத்துக்கு மேற்பட்டோரும் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'பாத் பைண்ட'ரின் துணை கொடுத்த தைரியத்துடன் சிறீலங்கா இராணுவம் தொடங்கிய ஆக்கிரமிப்பும் இவ்வாறு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. இச்சமரில் 50க்கு மேற்பட்ட படையினர் அழிக்கப்பட்டதுடன் 300க்கும் மேற்பட்டோர் காயப்படுத் தப்பட்டனர். ஒரு துருப்புக்காவி, இரண்டு தாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டன. மூன்று தாங்கிகளும் எம்.ஐ.24 உலங்கு வானூர்தியும் சிதைக்கப்பட்டன. சிறீலங்கா இராணுவத்தின் பல முக்கிய இராணுவ ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஆக மொத்தமாக ஓராண்டு காலமாக சிறீலங்காவின் ஜயசிக்குறுய் சந்தித்த இராணுவத் தோல்விகள் இராணுவத் தீர்வினை சிறீலங்காவால் நிறைவேற்ற முடியாது என்பதனை உலகுக்குத் தெட்டத் தெளிவாக்கி நிற்கிறது. ★

## ஒரு வருடம்... ஒரு வீரவரலாறு !

தொண்ணூற்றியேழு மே பதின்மூன்றில்
இடியென விடிந்த அதிகாலைப் பொழுதில்
செய்தி கேட்டதில் துவண்டோம் துடித்தோம்.

அன்னை மண்ணும் இனிய உறவுகளும்
எங்கே சிங்கப்படையின் இயந்திரக் கரத்தில்
சிக்குண்டு சாகுமோ..?
நாசமாய்ப்போகுமோ..? என்று தவித்தோம்.

வீரம்விளைந்த வன்னிமண்ணில்,
வணங்காமுடிகளின் தாய்மடிமீது
எங்கள் புலிகள் இருக்கின்ற போதிலும்,
பெரும்படை திரட்டி குடிமனை புகும் அந்த
வானரப்படையின் கைப்படு மாலையாய்
சிதையுமோ நம்நிலம் என்று துடித்தோம்.

வானம் பிளந்து கொட்டியது.
மழையல்ல பூமிதகித்தது.
வெறிகொண்டு சிங்களம் வீசிய குண்டினில்
பச்சை உயிர்களும் பச்சை மரங்களும் பற்றி
எரிந்தன நம் வயிறுகள்போல.

பெரும் கடல்தாண்டி நின்றபோதும்,
தேசம் அதிர்ந்ததில் எம் தேகம் அதிர்ந்தது.
நீங்கள் அழுததில் நாங்களும் அழுதோம்.
நீங்கள் துடித்ததில் நாங்களும் துடித்தோம்.

கைநீட்டி அணைக்க ஒண்ணாத்
தொலைதூரம் என்றாலும்..
மெய்யுணர்வால அணைக்கின்றோம்.
ஊடுருவி நிற்கின்ற உணர்வின் தளத்தில்நாம்
ஒன்றாகி நிற்கின்றோம்.
ஒன்றாகத் துடிக்கின்றோம்.

களம்வென்று புலிவீரர் வெற்றியைச் சுமந்தபடி
வருகின்ற அழகுகண்டு பூரிப்பில் திளைப்பீர்கள்.
அதுபோல நாமும் திளைக்கின்றோம்.
எங்கள் புலிகளின் வீரப்பண் எழுதி
நெஞ்சு நிமிர்த்தி நாமும் படிக்கின்றோம்.

வித்துடலம் சுமந்து, வருகின்ற படையணியின்
பக்கத்தில் நின்று, ஆதரவாய் அணைத்து
நெஞ்சை ஆற்றுதல்போல் உணர்கின்றோம்.

உங்களோடு துக்கித்து அழுது,
உங்களோடு சிரித்துப் பூரித்து,
ஈரம் வற்றாமல் உணர்வுடனே இருக்கின்றோம்.

வரலாற்றில் ஒரு பெரும் சாதனையைப்
படைத்துள்ளீர்.
பெரும்படைகொண்டு ஏவிய போரினை,
மதியினைத் துணிவினை தாய்நிலப்பற்றின்
துணையுடன் தாக்கினீர்.
வன்னி மண்ணில், சிங்களப்படையை
சிறையினுள் பூட்டினீர்.
சிதையினில் தீமூட்டினீர்.

வரலாறு இன்று உங்களின் பக்கம்.
வீரசரித்திரத்தைப் படைத்து நெஞ்சுநிமிர்த்திச்
சிரிக்கின்றீர்.
நாமும் சிரிக்கின்றோம்.
துன்பத்தை மிதித்து வெற்றிப் பாதையில்
விரையும் கால்களை முத்தம் இடுகின்றோம்.
நெஞ்சு நிமிர்த்தி எம் வீரப் புலிகளின்
என்புகள் நொறுங்க இழுத்து
அணைக்கின்றோம்.
தமிழன் வரலாற்றைப் படைக்கும் கைகளை ஏந்தி
கண்ணில் ஒற்றி நெஞ்சம் கசிகின்றோம்..

- ஜெயா -

# உலக இராணுவ வரலாற்றில் ஓர் ஒப்பற்ற சாதனை

## - 'ஜெயசுக்குறுப்' ஓராண்டு நிறைவையொட்டி தலைவர் ஆற்றிய உரை

தலைமைச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்
13.05.1998

எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்றைய நாள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாள். எமது எதிரியான சிறீலங்கா அரசின் மிகப் பெரிய படையெடுப்பான 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையை நாம் எதிர்த்து நின்று போராடி, இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது. மூன்று மாத காலத்திற்குள் முடிந்துவிடுமென போர்ப்பறை சாற்றி, பெரும் பிரச்சார எடுப்புடன் ஆரம்பமான இப்போர் நடவடிக்கை இன்றுடன் ஒரு வருடமாகியும் இன்னும் முடிவுபெறாது இழுபடுகிறது. ஒரு வருட காலத்தை எட்டிவிட்ட ஒரு தனிச்சமர் என்ற ரீதியில், தமிழீழப் போராட்ட வரலாற்றில் மட்டுமின்றி உலகப் போரியல் வரலாற்றிலும் மிகவும் நீண்டதொரு சமராக இது முக்கியத்துவம் பெறுகிறது. எதிரியின் படையெடுப்பை மூர்க்கமாக எதிர்த்துப் போராடி, எதிரி இராணுவத்தின் நகர்வு வேகத்தை தடுத்து நிறுத்தி, எதிரிப்படைகளை வன்னிக் காட்டிற்குள் முடக்கி வைத்து உலக இராணுவ வரலாற்றில் ஒரு ஒப்பற்ற சாதனையை எமது விடுதலை இயக்கம் நிலைநாட்டியிருக்கிறது.

'ஜெயசிக்குறு'ச் சமர் சாதாரண சமரல்ல. சமர்களுக்கெல்லாம் தாய்ச்சமராக, எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர் இது. இந்தச் சமரில் எதிரியானவன் தனது முழுப்பலத்தையும் வளத்தையும் குவித்துப் போரிட்டான். மூன்று பெரும் படைப்பிரிவுகளைச் சேர்ந்த முப்பதினாயிரம் இராணுவத்தினரும், விசேட பயிற்சி பெற்ற சிறப்புப் படையணிகளும், பின்னணிப் படைகளாகக் கடற் படையினரும், காவற்துறையினருமாகப் பாரிய படைப்பலத்தோடு இந்தச் சமர் நிகழ்ந்தது. கனரக ஆயுத சக்தியாக பெருமளவு பீரங்கிகளும், டாங்கிகளும் தரைப்படைக்கு வலுச்சேர்க்க ஆகாயப் படையைச் சேர்ந்த குண்டு வீச்சு விமானங்களும், தாக்குதற் ஹெலிகளும் இந்தச் சமரில் பெரும் பங்கு வகித்தன. ஒரு பகை நாடுமீது ஆக்கிரமிப்புத் தாக்குதலை நடத்துவது போன்று சிங்கள தேசம் தனது படைப்பலச் சக்தியை ஒன்று குவித்து, தமிழீழத்தின் இதய பூமியான வன்னி மண்மீது படையெடுத்தது.



இந்தப் பெரும் படையெடுப்பின் இராணுவக் குறிக்கோள் என்ன? அரசியல் ரீதியான அந்தரங்க நோக்கம் என்ன?

தமிழரின் போக்குவரத்திற்கு வசதியாக, கண்டி நெடுஞ்சாலையைத் திறந்துவிடுவதுதான் 'ஜெயசிக்குறு'வின் இராணுவ இலக்கு என சிங்கள அரசு கூறிவருகிறது. ஆனால், இப்படையெடுப்பின் உண்மையான நோக்கம் அதுவல்ல. 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையின் பின்னணியில் மிகவும் ஆபத்தான, நாசகாரமான நோக்கங்கள் இருக்கின்றன.

கண்டி நெடுஞ்சாலை வன்னி மாநிலத்தின் இதயத்தை ஊடறுத்துச் செல்கிறது. இந்த நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதன் மூலம் வன்னியை இருகூறுகளாகத் துண்டாடி, தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாட்டைச் சிதைத்து விடலாமென சிங்களப் பேரினவாத அரசு எண்ணியது.

அடுத்ததாக, வன்னிப் பெருநிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் என்பது சிங்கள அரசுக்குத் தெரியும். இங்குதான் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடமும் பாசறைகளும், நிர்வாகக் கட்டமைப்புகளும் இருக்கின்றன, என்பதும் எதிரிக்குத் தெரியும். எனவே,

வன்னியின் இதயம் மீது படையெடுப்பை நடாத்தினால் புலிகள் இயக்கம் போருக்கு முகம் கொடுத்தேயாகவேண்டுமென அரசு எண்ணியது. இந்தச் சூழலில், பாரிய படைப்பலத்தையும், படைக்கல சக்தியையும் பயன்படுத்தினால் புலிகள் இயக்கத்தின் இராணுவப் பலத்தை அழித்து, அதன் மூலம் தமிழரின் தேசியச் சுதந்திர இயக்கத்திற்கு முடிவு கட்டிவிடலாமென பேரினவாதிகள் கருதினர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து, வட தமிழீழத்தை தென் இலங்கையுடன் இணைத்துவிட்டால் தமிழரின் தேசியப் பிரச்சனை இராணுவ ரீதியில் தீர்வாகிவிடுமென சந்திரிகா அரசு கணக்குப் போட்டது. இத்தந்திரோபாயத்தையே 'சமாதானத்திற்கான' போர் என அரசு பூடகமாகச் சொல்லிவருகிறது.

இத்தகைய நாசகார நோக்குடனேயே ஜெயசிக்குறு படையெடுப்பு வன்னி மண்மீது தனது ஆக்கிரமிப்புப் பாதங்களை பதித்தது.

எதிரியின் இந்தப் படை நடவடிக்கை மிகவும் ஆபத்தான நோக்கத்தைக் கொண்டது என்பதை நாம் ஆரம்பத்திலிருந்தே புரிந்து கொண்டோம். இது எமது தாயக நிலத்தின் ஒருமைப்பாட்டிற்கு மட்டுமன்றி, எமது விடுதலை இயக்கத்தின் இருப்பிற்குமே எழுந்த மிகப்பெரிய சவாலாகும். எனவே, இப் படையெடுப்பை எமது முழுச் சக்தியையும் பிரயோகித்து மூர்க்கமாக எதிர்ப்பதென நாம் திடசங்கற்பம் பூண்டோம். இந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில், சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அசைவியக்கத்தை தடுத்து நிறுத்தி, எதிரிக்குப் பலமான பதிலடிகள் கொடுக்கும் வகையில் நாம் எமது போர் முறைத் திட்டத்தையும் உத்திகளையும் வகுத்தோம்.

'ஜெயசிக்குறு'ச் சமர் ஆரம்பமாவதற்கு முன்னர் சிங்கள அரசும், சிங்கள இராணுவத் தலைமையும் எமது இயக்கத்தின் படை பலம்பற்றியும், போராடும் உறுதி பற்றியும் ஒரு தவறான மதிப்பீட்டை வைத்திருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து நாம் மேற்கொண்ட தந்திரோபாயப் பின்நகர்வையும், எடிபல இராணுவ நடவடிக்கைக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்காததையும் அடிப்படையாக வைத்து, புலிகள் இயக்கம் பலவீனம் அடைந்துவிட்டதாக சிங்கள அரசு கருதியது. இந்தத் தவறான கணிப்பீடு காரணமாகவே 'ஜெயசிக்குறு' விற்கு குறுகிய காலக்கெடுக்களை வகுத்து, இராணுவத் தலைமை தலைகுனிய நேரிட்டது.

'ஜெயசிக்குறு' இராணுவத்தை எதிர்கொள்ள நாம் தயார்நிலையில் இருந்தோம். பெரும் எடுப்பிலான ஒரு மரபுவழிப் போருக்கு முகம்கொடுக்கும் வகையில் நாம் எமது இராணுவக் கட்டமைப்பைச் சீர்செய்து, ஒழுங்கமைத்து இருந்தோம். முல்லைத்தீவில் கிட்டிய மாபெரும் வெற்றியை அடுத்து, எமது படைக்கல சக்தி பலம் பெற்றிருந்தது. இந்த ஆயுத பலத்தை அடிப்படையாக வைத்து, பீரங்கிப்படையணி, டாங்கி எதிர்ப்புப் படையணி, விமான எதிர்ப்புப் படையணி என்ற ரீதியில் புதிய படைப் பிரிவுகளை கட்டியெழுப்பினோம். இறுக்கமான ஒழுங்கமைப்புடன் பன்முகத் தாக்குதலை நிகழ்த்தவல்ல படையணிகளாக இவை உருவாக்கப்பட்டன. எதிரியின் படைநகர்த்தல் போருபாயம் பற்றிய எமது நீண்டகால அனுபவத்தை ஆதாரமாகக்கொண்டு, எதிரியைத் திகைப்பூட்டும் நுட்பமான தாக்குதல் உத்திகளையும் தற்காப்பு முறைகளையும் வகுத்தோம். கேந்திரமான இடங்களில் மிக உறுதியான பாதுகாப்பு நிலைகளை அமைத்தோம். இப்படியாக, சிங்களத்தின் மிகப்பெரிய படையெடுப்பை எதிர்கொள்ள நாம் எம்மைத் தயார்படுத்திக் கொண்டோம்.

சென்ற ஆண்டு மே மாதம் 13ல் தொடங்கி இன்றுடன் 365 நாட்கள் வரை நீடித்திருக்கும் 'ஜெயசிக்குறு' சமரானது பாரிய அளவிலான தாக்குதல்களையும், மிகவும் உக்கிரமான சண்டைகளையும், பல ரகமான மோதல்களையும் கொண்ட பாரிய போர் நடவடிக்கையாகும். வலிந்து

தாக்குதல், தற்காப்புத் தாக்குதல், அதிரடித் தாக்குதல் என்ற ரீதியில் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் மீது நாம் நிகழ்த்திய தாக்குதல் எதிரிக்கு என்றுமில்லா பேரிழப்புக்களை ஏற்படுத்தியதோடு எதிரிபடைகளின் நகர்வு வேகத்தை தடுத்து நிறுத்தியது. தாண்டிக்குளத்திலும், பின்னர் கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளத்திலும் நாம் மேற்கொண்ட வெற்றிகரமான வலிந்து தாக்குதல்கள் எதிரிப்படைகளை சிதறடித்து நிலைகுலைய வைத்தது. இவ்விரு தாக்குதல்களிலும் எதிரிக்குப் பெரும் உயிர் சேதமும், பாரிய அளவிலான ஆயுத தளபாட இழப்பும் ஏற்பட்டது. வன்னி மண்ணை ஆக்கிரமித்து, எந்தத் திசையில், எத்தகைய பாதையை அமைத்தாலும் அதனை ஊடுருவித் தாக்கியழிக்கும் துணிவும், ஆற்றலும், பலமும் புலிப் படைக்கு உண்டு என்பதை இத்தாக்குதல்கள் எதிரிக்கு உணர்த்திருக்கிறது.

புலிப்படை வீரர்களின் வலுமிக்க தற்காப்புப் போருக்கு தலைசிறந்த உதாரணமாக விளங்கியது புளியங்குளம். இங்கு பலமான பாதுகாப்பு நிலைகளை அமைத்து ஐந்து மாதங்கள் வரை நிலைதளராது நின்று, எதிரியின் பல்வேறு முன்னேற்ற முயற்சிகளை முறியடித்தார்கள் எமது வீரர்கள். புலிவீரர்களின் மூர்க்கத்தனமான தற்காப்புத் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாது, கண்டி வீதிப் பாதையை விட்டு காடுகளுக்குள் அகலக்கால் நீட்டியது சிங்கள இராணுவம். பின்னர் புதூர் சந்தியிலும், மன்னகுளத்திலும், சமீபத்தில் ஒலுமடுவிலும் புலிகள் மேற்கொண்ட துணிகரமான தற்காப்புத் தாக்குதல்கள் எதிரிக்கு பெரிய அளவில் உயிரிழப்புக்களை

www.tamilarangam.net



ஏற்படுத்தியதோடு, எதிரியின் மனவுறுதியையும் உடைத்தது. புளியங்குளத்தை அடுத்து இப்பொழுது மாங்குளத்தைக் கட்டிக்காத்துப் போரிடும் எமது வீரர்கள் எதிரிக்குச் சிம்மசொற்பனமாக விளங்கிவருகிறார்கள்.

'ஜெயசிக்குறு'ச் சமரில், சிங்கள் ஆக்கிரமிப்பு இராணுவம் தனது இலக்கை அடைவதற்காக சகலவிதமான தந்திரோபாயங்களையும் கையாண்டது. போரியல் விஞ்ஞான ஏடுகளிலுள்ள புதிய, புதிய உக்திகளையும் பீரட்சித்துப் பார்த்தது. போதாக்குறைக்கு அந்நிய இராணுவ மேதாவிகளின் போர்முறைத் திட்டங்களையும் நடைமுறைப் படுத்தியது. ஆயினும், இந்த போர்த் தந்திரங்கள் புலிகளிடம் பலிக்கவில்லை. இவற்றினால் புலிகளின் பாதுகாப்பு வியூகங்களை உடைக்க முடியவில்லை. இத்தந்திரோபாய முன்னேற்ற முயற்சிகள் எதிரிக்குப் பின்னடைவுகளையும் போரிழப்புக்களையுமே ஏற்படுத்தியது.

இந்த ஓராண்டுச் சமரில், சிறீலங்கா இராணுவம் மூவாயிரத்திற்கு மேற்பட்ட படையினரைப் பலிகொடுத்திருக்கிறது. ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உடற்சேதம் அடைந்திருக்கிறார்கள். இந்த நீண்டகாலச் சமரில், சிறப்புப் பயிற்சி பெற்ற முன்னணிப் படையணிகள் பல சிதைக்கப்பட்டிருக்கின்றன. டாங்கிப் பிரிவுகள் நாசம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆயுதக்களஞ்சியங்கள், வெடிமருந்துக் குதங்கள், இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் பெருந்தொகையான ஆயுததளபாடங்களை புலிகள் இயக்கம் கைப்பற்றியிருக்கிறது. எதிரியின் இழப்பு மிகப்பெரிது. இத்தனை இழப்புக்களைச் சந்தித்தும் இன்னும் எதிரி தனது இலக்கை அடையவில்லை.

இந்தப் பெரும் சமரில் நாம் எதிர்கொண்ட ஒவ்வொரு சண்டையும் போர்க்கலையில் எமக்குப் புதிய அனுபவத்தைப் பெற்றுத்தந்தது. இதனால், எமது போராடும் திறன் பெரிய வளர்ச்சி கண்டிருக்கிறது. இந்தப் போரனுபவம் எமது போராளிகளின் மனோதிடத்தையும் இலட்சிய உறுதியையும் மேலும் வலுவடையச் செய்திருக்கிறது. இந்த ஓராண்டு அக்கினிப் பிரவேசத்தில் நாம் எரிந்து போகவில்லை. மாறாக, நாம் புத்துயிர் பெற்றுப் புதிதாக எழுந்தோம்; பலமாக எழுந்தோம்.

எதிரியின் படைப்பலம் பெரிது. ஆயுத பலமும் பெரிது. வளமும் பெரிது, இந்த வகையில், இராணுவ சமபலம் எதிரிக்கே சாதகமாக இருந்தது. ஆனால், எதிரியிடம் இல்லாத ஒரு பலம்

மட்டும் எம்மிடம் இருந்தது. அதுதான், எமது போராளிகளின் மனோபலம். எமது போராளிகளிடமிருந்த அசைக்க முடியாத மனவுறுதியும், அதனால் பிறக்கும் அபாரமான துணிவுமே வன்னிக் களத்தில் எமது அதி சக்திவாய்ந்த ஆயுதமாக இருந்தது. மலையாக எதிரியும் மடுவாக நாமும், சமசீரற்ற இராணுவ நிலையில் நின்றபோதும், இந்த நீண்ட சமரில் எமது போராளிகள் வெளிக்காட்டிய நெஞ்சுறுதியானது எமக்கு மலையான பலத்தைக் கொடுத்தது. அந்த மலையான பலமே, வன்னியில் சிங்கள இராணுவப் பூதத்தை நிலைகுலைய வைத்தது.

ஓயாத புயலாக ஓராண்டு காலம் நீடித்த இப்பெரும் சமரில் எத்தகைய துன்பங்களைச் சுமந்து, எத்தகைய நெருக்கடிகளைச் சமாளித்து, எத்தகைய ஆபத்துக்களை எதிர்கொண்டு எமது வீரர்கள் மனவுறுதியோடு போராடினார்கள் என்பதை நான் நன்கறிவேன்.

நெருப்பு மழையாக ஓயாது பொழிந்த பீரங்கி எறிகணைகளுக்கும், மின்னல் வேகத்தில் நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சுக்களுக்கும் முகம்கொடுத்து, ஓய்வில்லாது, உறக்கமில்லாது, உருப்படியான உணவில்லாது எமது வீரர்கள் சளைக்காமல் போரிட்டார்கள்.

வன்னிக்களத்தில் இயற்கை அன்னையும் எமது போராளிகளுக்கு இரக்கம் காட்டவில்லை. மாரிப்பெருமழையும், உறையவைக்கும் பனியும், கோடையின் கொழுத்தும் வெயிலும், பாம்பும், நுளம்பும், மலேரியாவுமாக வன்னிக் காட்டின் கொடுமையான சூழலையும் எமது போராளிகள் சகிக்க வேண்டியிருந்தது.

போர் ஓய்ந்த வேளையிலும் எமது போராளிகள் ஓய்வெடுத்துக் கொள்ளவில்லை. பதுங்குகுழிகள் வெட்டி, பாதுகாப்பு அரண்கள் கட்டி அந்தக் காப்பரண்களில் குடியிருந்து, இரவு பகலாக விழித்திருந்து, எமது மண்ணைக் காப்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

'ஜெயசிக்குறு'ச் சமரில் எமது போராளிகள் வெளிப்படுத்திய மனவலிமையும், செயலாற்றலும் அபாரமான சகிப்புத்தன்மையும் பெரிதும் பாராட்டத்தக்கது. எனது வீரர்களின் இந்தத் தலைசிறந்த போர்ப்பண்புகளைக் கண்டு நான் பெருமைகொள்கின்றேன்.

இந்த வரலாற்றுச் சமரில் எமது தளபதிகள் வகித்த பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது. தளபதிகளின் தளராத உறுதியும், திறனாற்றலும், கடும் உழைப்பும் காரணமாகவே வன்னிக் களத்தில் நாம் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்ட முடிந்தது. படையணிகளைச் சீரமைத்து, ஒழுங்கமைத்து, தாக்குதல் திட்டங்களைச் செம்மையாகச் செயற்படுத்தி, களத்தில் போராளிகளை ஊக்குவித்து, வழிநடத்தி, எமது தளபதிகள் காட்டிய செயற்திறன் பெரிதும் பாராட்டத்தக்கது.

பல்வேறு பிரிவினரதும் ஒட்டுமொத்த முயற்சிகள் ஒன்றுகுவிக்கப்பட்டதாகவே இப்பாரிய படையெடுப்பிற்கு நாம் முகங்கொடுத்தோம். ஒவ்வொரு பிரிவும் தனது பணியைத் திறம்படச் செய்தது. எதிரியின் பல முன்னேற்ற முயற்சிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்ட பீரங்கிப் படைப்பிரிவு, பெரும் ஆபத்துக்களை எதிர்கொண்டு எதிரியின் நிலைகளையும், நகர்வுகளையும் கண்காணித்து அறிவித்த வேவுப் பிரிவு, எதிரியின் டாங்கி, கவசவாகன அணிகளைச் சிதைத்த டாங்கி எதிர்ப்பு விசேட அணி, எதிரியின் மனவுறுதியைச் சிதறடித்த கரும்புலி அணி, தாக்கும் ஹெலிகள் பலவற்றை களத்திலிருந்து அகற்றிய விமான எதிர்ப்பு அணி ஆகிய படைப்பிரிவுகளின் சாதனைகள் பாராட்டுக்குரியவை.

எமது இயக்கத்தின் மருத்துவப் பிரிவு இந்தச் சமரில் ஆற்றிய பங்கு மகத்தானது. விழுப்புண் அடைந்த பெருந்தொகையான போராளிகளுக்கு திறம்படச் சிகிச்சையளித்து, பராமரித்து,

அவர்களது உயிர்காத்து எமது மருத்துவப் பிரிவினர் ஆற்றிய பங்கை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

பலத்த இடர்களுக்கும் உயிராபத்துக்களுக்கும் மத்தியில் வீரம் செறிந்த இப்போராட்டத்தை ஆவணப்படுத்திய வீடியோ, புகைப்படப் பிரிவினருக்கும் எனது பாராட்டுக்கள்.

எறிகணைத் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்களுக்கும் முகம்கொடுத்து, இந்த நீண்ட காலச் சமரில் தமது பங்கைத் திறம்படச் செய்த வாகனப்பிரிவினருக்கும், வழங்கல் பிரிவினருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

இச்சமரில் பொதுமக்களின் பங்களிப்பும் இருந்திருக்கிறது. இதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது போராளிகளின் உயிர்காக்க இரத்த தானம் வழங்கி, எமது போராளிகளின் பசி தீர்க்க உலர் உணவு வழங்கி எமது போராளிகளின் பாதுகாப்பிற்காக பதுங்கு குழிகள் வெட்டி, எமது மக்கள் ஆற்றிய பெருந்தொண்டிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

நாளையுடன் இரண்டாம் ஆண்டில் கால் எடுத்துவைக்கும் 'ஜெயசிக்குறு'ச் சமர் மீண்டும் தொடர்ந்து நீண்டு செல்லவிருக்கிறது. இதற்கு காலவரையறை இடுவதற்கு சிங்கள அரசுக்கு இப்பொழுது துணிவில்லை. எனினும், இந்த இராணுவ நடவடிக்கையோடு அரசியல் நோக்குகளும் பின்னிப்பிணைந்து கிடப்பதால் இந்தப் பாதை திறப்புச் சமரை அரசு கைவிடப் போவதில்லை. இராணுவக் கட்டளைப் பீடத்தளபதிகளை மாற்றியும், இராணுவ அதிகாரிகளுக்கு முதிராநிலைப் பதவியுயர்வுகளை வழங்கியும், இராணுவத்திலிருந்து விலகியோடியவர்களுக்கு மாறி, மாறிப் பாவ மன்னிப்புக்களை வழங்கியும், ஊக்கமிழந்து சோர்ந்துபோன இராணுவ இயந்திரத்தை முடுக்கிவிடுவதற்கு சிங்கள அரசு பகீரத முயற்சிகளைச் செய்து வருகிறது. இதனால் மீண்டும் 'ஜெயசிக்குறு'ச் சமர் தொடரும். மீண்டும் இந்த வணங்கா மண்ணில், ஆக்கிரமிப்பாளர்களின் இரத்தம் ஆறாக ஓடவிருக்கிறது. மீண்டும் ஆயிரமாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் கண்டிப் பிரபுத்துவ வர்க்கத்தின் வரட்டுக் கௌரவத்திற்கும் குருட்டுக் கொள்கைக்கும் பலிக்கடாவாகப் போகிறார்கள்.

ஜெயசிக்குறுச் சமரின் களநிலை உண்மைகளை சந்திரிகா அரசு இருட்டடிப்புச் செய்து வருகிறது. போரின் பேரிழப்புக்களை மூடிமறைத்து, பொய்யான பரப்புரைகளைச் செய்து, சிங்கள மக்களையும் உலகத்தையும் ஏமாற்றி வருகிறது. ஆயினும், இந்த இராணுவ நடவடிக்கை ஓராண்டு காலம் நீடித்த தனிச் சமராக உலகப் போரியல் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும் உண்மையை அரசால் மூடிமறைக்க முடியவில்லை. இச்சமர் நீண்ட காலம் நீடித்துச் செல்வதையும், அதன் நிச்சயமற்ற எதிர்காலத்தையும் கணிப்பிடும் பொழுது இப்படை நடவடிக்கையானது சிறீலங்கா அரசுக்கு ஏற்பட்ட பாரிய இராணுவப் பின்னடைவாகவே உலகம் மதிப்பீடு செய்யும். அத்தோடு, இச்சமரில் எமது இயக்கம் வெளிப்படுத்திய போர்த் திறன், உலக இராணுவ நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. தமிழர் படையான புலிப்படை, வீரம் மிக்க ஒரு தேசிய விடுதலை இராணுவமாகப் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது என்ற உண்மையையும் உலகம் உணர்ந்துள்ளது.

'ஜெயசிக்குறு'ச் சமர் சந்திரிகா அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. தமிழரின் தாயக மண்ணை இராணுவ பலத்தால் அடக்கி ஆளவேண்டுமென்ற ஆதிக்க வெறி சிங்கள தேசத்தை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது.

நாம், எமது தாயக மண்ணை எமது உயிரிலும் மேலாக நேசிக்கிறோம். எமது தாயக தேசம் எமது இனத்தின் உயிருக்கு நேரானது. அந்த மண்ணைப் பாதுகாப்பது எமது இன்த்தின் ஆன்மாவைப் பாதுகாப்பதற்கு நிகரானது. எமது தாயகத்தின் இதயத்தை ஊடுருவி நிற்கும் ஆக்கிரமிப்பாளரை எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் வரை 'ஜெயசிக்குறு'ச் சமர் ஓய்ந்து விடப்போவதில்லை.

'ஜெயசிக்குறு'ச் சமரில், வீரமுடன் களமாடி, எமது மண்ணின் விடிவிற்காக மடிந்து போன ஆயிரத்து முன்னூறு போராளிகளுக்கும் எனது சிரம் தாழ்த்தி வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

வே. பிரபாகரன்

தலைவர்,

தமிழீழ விடுதலைப் புலிகள்

www.tamilarangam.net



# 'வெற்றி நிச்சயம்' நடக்காது!

நடக்கும் என்பார் நடக்காது
நடக்காதென்பார் நடந்துவிடும்!
கிடைக்கும் என்பார் கிடையாது
கிடைக்காதென்பார் கிடைத்துவிடும்!

கவியரசு கண்ணதாசன் "தாயைக் காத்த தனையன்" திரைப்படத்திற்காக எழுதிய இத் தத்துவப் பாடலுக்கு எடுத்துக்காட்டாக **'ஜெயசுக்குறுய்'** அல்லது **'வெற்றி நிச்சயம்'** இராணுவ நடவடிக்கை அமைந்துவிட்டது.

நாள் நட்சத்திரம் பார்த்து, வேத மந்திரங்கள் ஒலிக்க 1997 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் ஆரம்பித்த ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கை ஓராண்டைப் பூர்த்தி செய்து, இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது,

எழுபத்தைந்து கி.மீட்டர் (46 மைல்கள்) தொலைவிலுள்ள வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையை இணைக்கும் முகமாக மேற் கொள்ளப்பட்ட ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கை, எண்ணி 45 நாட்களுக்குள் முடிந்துவிடும் என்பதே சிங்கள இராணுவம் போட்ட கணிப்பாகும். கூடியபட்சம் இரண்டு மாதத்திற்குள் முடிந்துவிடும் என்பதே உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த மற்றும் உயர்மட்ட இராணுவத்

**நக்கீரன்**

தளபதிகள் சிங்கள மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியாகும்.

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ் சாலையை இரண்டு மாதங்களுக்குள் பிடிக்க முடியாது, அதற்குரிய படைபலம் போதாது என்று வாதாடிய சில சிங்கள இராணுவத் தளபதிகள் அமைச்சர் ரத்வத்தயால் இடமாற்றம் செய்யப் பட்டார்கள்.

இன்று, இரண்டு மாதங்கள் அல்ல, ஈராறு மாதங்கள் கழிந்த நிலையில் ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கை பாதிக்கிணறு தாண்டியவன் கதைபோல மாங்குளத்திற்குத் தெற்கே புதையுண்டு போய்க்கிடக்கிறது.

குறைமட்ட யுத்தத்தை (low intensity warfare)ப் பொறுத்தளவில் சிறீலங்காவின் அண்மைக்கால வரலாற்றில் மட்டுமல்ல, உலக வரலாற்றிலேயே ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கையே மிக நீண்ட யுத்தம் என்ற 'சாதனையை' நிலைநாட்டியுள்ளது.

மூன்றாவது தமிழீழப் போர் வரலாற்றில் சுமார் இருபதாயிரம் துருப்புக்களை உள்ளடக்கிய இரண்டு அணிகளை (53 & 55 Divisions) சிறீலங்கா இராணுவம் யுத்தத்தில் ஈடுபடுத்தியதும் இதுவே முதற்றடவையாகும். பின்னர் இந்த எண்ணிக்கை நாற்பதினாயிரம் துருப்புக்களை உள்ளடக்கிய மூன்று அணிகளாக (53rd & 55th 56th divisions) அதிகரிக்கப்பட்டது. இராணுவத்திற்குத் துணையாக, 10,000 பொலிசாரும் கடற்படையினரும் விமானப்படையினரும் ஜெயசுக்குறுய் போர்முனையில் நொச்சிமோட்டை தொடக்கம் கனகராயன்குளம் வரையும் மணலாற்றில் ஒலுமடுவுக்கு வடக்கே அம்பகாமம் வரையிலுமான பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். எனவே வன்னிப் போர்க்களத்தில் எஞ்சியுள்ள 25 கிலோ மீட்டர் தூரத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்ற மொத்தம் 50,000 படையினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இராணுவ அணிகளையும் சேர்த்து வடக்கே இராணுவத்தின் எண்ணிக்கைப் பலம் இப்போது 75,000ஐ எட்டியுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை பாதை திறப்புக்கான நடவடிக்கை என்று வெளியில் பறைசாற்றிக் கொண்டாலும், உண்மையில் விடுதலைப் புலிகளை பெரும் எண்ணிக்கையில் கொன்றொழிப்பதே முக்கிய குறிக்கோள் என்று இராணுவத்தரப்பில் சொல்லப் பட்டது. இந்த இராணுவ இலக்கில் உண்மை இல்லாமலில்லை.

போக்குவரத்துப் பாதை தேவையென்றால் அரசு மன்னார் – பூநகரி – கேரதீவுப் பாதையை விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்ப்புக்கு முகம் கொடுக்காமல் திறந்திருக்கலாம். 'எடிபல' இராணுவ நடவடிக்கை மூலம் மன்னார் – வவுனியா பாதை திறக்கப்பட்டுவிட்டதால், அடுத்த கட்ட நடவடிக்கையாக யாழ் குடாநாட்டிற்கு மன்னார் – பூநகரி பாதையைத் திறப்பதே தர்க்க ரீதியில் சரியாக இருந்திருக்கும். ஆனால், சிறீலங்கா அரசு அப்படிச் செய்யவில்லை.

துணைப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தயின் கூற்றுப்படி, ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கையின் அரசியல் இலக்கு நாட்டை மீண்டும் இணைப் பதாகும். அதாவது சிங்கள ஆட்சியின் ஆணையை வன்னிப் பிரதேசத்தில் நிலைநாட்டி, வடக்கையும் தெற்கையும் இணைப்பதாகும்.

ஆனால் இந்த இராணுவ – அரசியல் இலக்குகளில் எதுவும் நிறைவேறாத நிலையில், இன்று ஜெயசுக்குறுய் நடவடிக்கையை இராணுவ ரீதியில் முன்னெடுக்க முடியாமலும் அரசியல் ரீதியில் பின்வாங்க முடியாமலும் ஒரு இரண்டும் கெட்டான் நிலையில் சிங்கள இராணுவமும் சந்திரிகா அரசும் சிக்குப்பட்டு நிற்கிறது. கடந்த ஓராண்டில் இராணுவம் பெருமளவிலான, முன்னெப்போதும் சந்தித்திராத ஆள், ஆயுத இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

இராணுவம் இதுவரை தனது தரப்பில் பெருமளவு இராணுத்தினர் கொல்லப் பட்டுள்ளதை ஒத்துக்கொண்டுள்ளது. உண்மையில் இராணுவம் இதுவரை மூவாயிரத்துக்கும் மேற்பட்ட படை யினரை இழந்துள்ளது என நம்பப்படுகிறது. போர்க்களத்தில் இறக்கும் ஒருபகுதி இராணுவத்தினரை 'காணாமல் போனோர்' (missing in



action) பட்டியலில் இராணுவம் சேர்த்துவிடுவது வழக்கமாகையால் உண்மையான இழப்பு இதைவிட அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதன்பிரகாரம், இதுவரை கைப் பற்றப்பட்ட தூரத்திற்கு இறந்த இழப்பு விகிதம் முன்னைய காலத்தை விட மிக அதிகமாகும். இதன் க்னத்தை

# 'தோல்வி நிச்சயம்' நடக்கும்!

கிரகித்துக்கொள்ள பழையகால புள்ளிவிபரங்களைப் பார்ப்பது பொருத்த மாகவிருக்கும். ஜே.ஆர் சகாப்தம் (யூலை 83 – டிசம்பர் 88) கொல்லப்பட்டவர் தொகை 1187. காயப்பட்டவர் தொகை 843. பிரேமதாசா சகாப்தம் (ஜனவரி 89 – ஒக்டோபர் 94) கொல்லப்பட்டவர் தொகை 2679. காயப்பட்டவர் தொகை 5565.

சந்திரிகா சகாப்தம் (நவம்பர் 94 – யூன் 97) கொல்லப்பட்டவர் தொகை 6848, காயப்பட்டவர் தொகை 7137. கொழும்பிலிருந்து வெளியாகும் "வீக்கன்ட்" பத்திரிகை தொகுத்த புள்ளிவிபரம் இவையாகும். இன்றைய பொழுதில் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். ஆள் இழப்புக்களை விட சிறீலங்கா இராணுவம் பலகோடி பெறுமதியான நவீன ஆயுதங்களை புலிகளிடம் பறிகொடுத்துள்ளது. இன்னும் பல கோடி பெறுமதியான போர் விமானங்கள், போர்க்கப்பல்கள் இவற்றை புலிகளின் தாக்குதல் காரணமாக இழந்துள்ளது. இதேவேளை, ஜெயசுக்குறுய் ஆரம்பித்த முதல் 8 மாத காலத்தில் விடுதலைப் புலிகள் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் எதிரிப்படையை வன்னி மண்ணிலிருந்து விரட்டியடிக்கும் புனிதப்போரில் முதல் எட்டு மாதங்களில் 1165 போராளிகளை இழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். இப்போது நடைபெற்றுக் கொண்டி ருக்கும் யுத்தத்தில் தங்களை விட ஆட்பலத்திலும் சரி ஆயுத பலத்திலும் சரி பல மடங்கு பலங்கொண்ட சிங்களப்படையை விடுதலைப் புலிகள் மூர்க்கமாக எதிர்த்து பல புதிய போர்த்தந்திரங்களையும் யுக்திகளையும் கையாண்டு திணறடித்து வரு கின்றார்கள்.

போர் ஆரம்பித்த இந்த ஒரு வருட காலத்தில் நான்கு பெரிய பின்புற எதிர்த்தாக்குதல்களை புலிகள் நடாத்தி எதிரிப்படைக்கு பாரிய ஆள், ஆயுத இழப்புக்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தங்களுக்குச் தோதான அல்லது சாதகமான களம் வரை எதிரிப்படையை முன்னேற விட்டு, பின் மின்னல் வேக எதிர்த் தாக்குதலை நடாத்தி எதிரிப்படையை நிலைகுலையச் செய்யும் போர் யுக்தியை வன்னிப் போர்க்களத்தில் புலிகள் தாராளமாக கையாண்டு வருகிறார்கள். கடந்த ஏப்ரல் மாதம் 20ஆம் நாள் சிறீலங்கா இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவு அதன் தளபதி பிரிகேடியர். நிகால் மாரம்ப தலைமையில் மாங்குளம் சந்தியை பிடிக்கும் நோக்குடன் ஒலுமடுவிலிருந்து புறப்பட்டபோது, அதற்கேற்பட்ட அவலத்தையும் அழிவையும் இதற்கு உதாரணமாகக் காட்டலாம். அதே நாள் அதேநேரம், இன்னும் இருமுனைகளில் முன்னேறுவது போல் மேலும் இரண்டு இராணுவ அணி போக்குக்காட்டி புலிகளின் கவனத்தை திசைதிருப்ப முயற்சித்தாலும் 55 ஆவது படைப்பிரிவுதான் மாங்குளத்தை பிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது என்பது புலிகளுக்குத் தெரிந்திருந்தது.

வழக்கமாக காலை 5 மணிக்கு தாக்குதலை ஆரம்பிக்கும் இராணுவம் இம்முறை விடுதலைப் புலிகளை எதிர்பாராத நேரத்தில் தாக்கும் நோக்கோடு அதிகாலை 1.30 மணிக்கு

> இன்று ஜெயசுக்குறுய் நடவடிக்கையை இராணுவ ரீதியில் முன்னெடுக்க முடியாமலும் அரசியல் ரீதியில் பின்வாங்க முடியாமலும் ஒரு இரண்டும் கெட்டான் நிலையில் சிங்கள இராணுவமும் சந்திரிகா அரசும் சிக்குப்பட்டு நிற்கிறது. கடந்த ஓராண்டில் இராணுவம் பெருமளவிலான, முன்னெப்போதும் சந்தித்திராத ஆள், ஆயுத இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

தொடர்ச்சி 4 ம் பக்கம்......

www.tamilarangam.net



# இனமானம் இல்லை! அறிவுமா..?

ஒரு ஆண்டு முழுமையாகக் கடந்துவிட்டது. வன்னிப் பெரு நிலப்பரப்பை ஊடறுத்து குடாநாட்டு இராணுவத்துக்கான இராணுவ வழங்கலை மேற்கொள்ள, தரைப்பாதை அதுவும்... குறைந்த காலத்துத் திட்டம். இந்த அற்பத்தனமான குறுகிய சிந்தனையுடன் விடுதலைப் புலிகளின் பலம்பற்றிய முட்டாள்தனமான கணீப்பிட்டுடன், வன்னிக்களம் குறித்த குருட்டுத்தனமான பார்வையுடன் தொடங்கப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை முழுமையாக ஒரு வருடத்தைக் கடந்துவிட்டது. நல்ல நாள் பார்த்து, நேரம் கணித்து 1997 மே 13இல் தொடங்கப்பட்ட வெற்றிநிச்சயம் எனப் பொருள்தரும் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை இன்று தோல்வி குறித்த நடுக்கத்துடன் வன்னிக் காட்டில் முடங்கிக்கிடக்கின்றது.

> தலைமைறைவான பதினையாயிரம் இராணுவத்தினரில் குறைந்தது ஆறாயிரம் படையினர் திரும்பிவந்தாலே போதுமானது, ஜெயசிக்குறுவை விரைவாக முடித்துவிடலாம் என்று சிறீலங்கா இராணுவத் தளபதி றோகான் தலுவத்தை சொல்லியிருந்தார். ஆனால், திரும்பிவந்த இராணுவத்தினரோ ஐயாயிரம்தான் என்கிறது சிங்கள அரசு. ஆக ஜெயசிக்குறுவை விரைவாக முடிக்க வேண்டிய அவசியமும் இல்லை.

புளுதிபறக்க பூமியின் மேனியைக் கீறிக்கிளித்தபடி சிங்களத்தின் டாங்கிகள் உறுமிக்கொண்டு முன்னேற, சிங்களத்துச் செய்தி நிறுவனங்களோ அதைவிடவேகமாக பொறிபறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டன.

இதோ தரைப்பாதை திறந்தாகிவிட்டது... இனியென்ன சவாரிதான் என்பதுபோன்ற மாயையை ஏற்படுத்தும் விதமாய், தத்தமது இயல்புக்கேற்ப... இராணுவ ஆய்வுகளையும் களமுனை ஆய்வுகளையும் சிங்களக்கட்டுரையாளர்கள் ஆய்ந்து தள்ளினர்.

விடுதலைப் புலிகளின் கதி அதோ கதி என்பது போன்றும், விடுதலைப் புலிகளின் தலைமை நிலையை நோக்கி குறிப்பாக தலைவர் பிரபாகரனின் இருப்பிடம் நோக்கி படையினர் முன்னேறிவருகின்றனர் என்பது போன்றும் கலர் கலரான வான வேடிக்கைகள் போல சிங்கள மக்களை பிரமிப்பூட்டும் பிரச்சாரங்களை சிங்கள செய்தியூடகங்கள் செய்தன.

மூன்று பற்றாலியன் படையுடன் படைநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக சிங்கள அரசாங்க தரப்பில் அப்போது தெரிவிக்கப்பட்டது. அதாவது ஏறக்குறைய பதினையாயிரம் படையினர். பின்னர் அதன் எண்ணிக்கை இருபதினாயிரம் ஆக உயர்ந்து, இன்று அதன் எண்ணிக்கை முப்பதினாயிரத்தை எட்டிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சில வாரங்கள் அல்லது ஓரிரு மாதங்களில் முழுமையாக நிறைவுபெறும் என்ற நம்பிக்கையுடன், பதினையாயிரம் இராணுவத்தினரோடு ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, ஒரு வருடத்தை கடந்துவிட்ட நிலையில் அதன் படைபலத்தையும் அதிகப்படுத்தவேண்டிய கட்டாயத்துக்குள் அது தள்ளப்பட்டுள்ளது என்பதையே நிலைமை காட்டுகின்றது. தற்போது, விநியோகப் பாதை திறக்கப் புறப்பட்ட ஜெயசிக்குறுப் படையினருக்கு விநியோகம் செய்வதே பெரும்பாடாய் கிடக்கிறது சிறீலங்கா அரசாங்கத்திற்கு.

இந்த ஒரு வருடச் சமரில், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ஏழாயிரத்துக்கு மேற்பட்ட படையினர் காயங்களுக்கும் படுகாயங்களுக்கும் ஆளாகினர். இவர்களில் ஆயிரக்கணக்கினர் அவயவங்களை இழந்துள்ளனர். ஆக, மூன்று பட்டாலியன் படையினருடன் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட ஜெயசிக்குறு நடவடிக்கையில், இரண்டு பட்டாலியன் படையினர் சண்டைக்களத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது சண்டைக்களம் நோக்கி பிற பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட இராணுவத்தினரும் கடற்படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், இராணுவத்தினரைக் குவிக்க வலை விரிப்புக்கள் நடைபெறுகின்றன. பாடசாலைகளில் சிங்களத்தின் கண் விழுந்துள்ளது. கட்டாய இராணுவச் சேவை குறித்தும் பேசி, சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் சிங்கள மக்களைப் பயமுறுத்துகின்றார்.

தலைமறைவான இராணுவத்தினருக்கு மீண்டும் பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டபோதும் அம்முயற்சியும் தோல்வியடைந்துள்ளது. தலைமறைவான பதினையாயிரம் இராணுவத்தினரில் குறைந்தது ஆறாயிரம் படையினர் திரும்பிவந்தாலே போதுமானது, ஜெயசிக்குறுவை விரைவாக முடித்துவிடலாம் என்று சிறீலங்கா இராணுவத் தளபதி றோகான் தலுவத்தை சொல்லியிருந்தார். ஆனால், திரும்பிவந்த இராணுவத்தினரோ ஐயாயிரம்தான் என்கிறது சிங்கள அரசு. ஆக ஜெயசிக்குறுவை விரைவாக முடிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதேவேளை, பொதுமன்னிப்பு திட்டம் தோல்வியடையவும் இல்லை எனக் காட்டவே சிறீலங்கா அரசு ஐயாயிரம் படையினர் மீண்டும் இணைந்து கொண்டனர் என அறிவித்திருக்கிறது. சில நூறு பேர்தான் கட்டாயத்தின்பேரில் படையில் மீண்டும் இணைய சம்மதித்துள்ளனர் என்பதே உண்மையான செய்தி. அதிலும் சில இராணுவத்தினர், ஏதோ ஒரு மறைவிடத்தில் இருந்துகொண்டு, தொலைபேசி மூலம் நிபந்தனை விதித்திருக்கின்றார்கள். அதாவது, சண்டைக்களத்திற்கு தம்மை அனுப்புவதில்லை என உறுதி கூறினால் மட்டுமே மீண்டும் படையில் இணைய சம்மதிப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சண்டையை தொடர்ந்து நடத்தத்தான் இந்தப் பொதுமன்னிப்பே என, படைத்துறை அதிகாரிகள் அவர்களுக்கு எப்படி விளக்குவார்கள். சண்டைக்களத்துக்கு தேவையிலாதுபோனால், சுதந்திரநாளையொட்டி சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவினால் பொதுமன்னிப்பு அறிவிக்கப்பட்டு... பின் அக்காலக்கெடு நீட்டப்பட்டு... பின் மீண்டும் தற்போது அறிவிக்கப்படுமா என்பதை தலைமறைவான இராணுவத்தினர் யோசித்துப்பாத்திருக்கவேண்டும் எனக் கேட்பதில் நியாயமில்லை.

கடந்த வாரத்தில் முக்கியமாகப் பேசப்பட்ட விடயம், ஐக்கிய நாடுகள் சபையின், செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியின் வன்னி விஜயம். விடுதலைப் புலிகள் யுத்தத்தில் சிறுவர்களைப் பயன்படுத்துகின்றனர் என்ற சிக்களத்தின் பிரச்சாரத்தை, அதன் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் காவித்திரிந்து உலக நாடுகளில் செய்த வியாபாரத்திற்கான பலன் என சிங்களம் இதுகுறித்து ஆரம்பத்தில் புளுகப்பட்டுக் கொண்டது.

விசேட பிரதிநிதி வன்னி சென்றார்... விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேசினார்... வன்னி மக்கள் படும் துயரங்களை குறிப்பாக இளம் சந்ததி படும் துன்ப துயரங்களை நேரடியாகவே கண்டார்... கொழும்பு திரும்பி புலிகளின் விளக்கத்தில் திருப்திகொள்வதாக அறிக்கையும் கொடுத்தார். கூடவே உணவு மருந்தின்றி மக்கள் படும் துன்பத்தை எடுத்துக் கூறினார். மனிதாபிமான உதவிகள் மக்களுக்குச் சென்று கிடைக்கின்றனவா என்பதை அவதானிக்க கண்காணிப்புக்குழு அமைப்பது பற்றிய திட்டத்தைப்பற்றியும் கூறினார்.

இப்போது சிங்களத்திற்குக் கெட்ட புளுக்கம். புலிகள் பொய் சொல்வதில் கெட்டிக்காரர். உறுதி தருவதெதனையும் நிறைவேற்றுவதில்லை என்பது சிங்களத்தின் சளாப்பல்.

மனிதாபிதாபிமான உதவிகள் மக்களிற்குப் போய்ச்சேருகின்றனவா என கண்காணிக்க கண்காணிப்புக்குழு அமைப்பதுபற்றியும் அதிருப்தி என்புதுடன் அதனை எதிர்க்கவும் செய்தது.

மொத்தத்தில் விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்கின்றார்கள் எனப் பிரச்சாரப்படுத்த எடுத்த முயற்சி, இன்று சிங்களத்திற்கு தலையிடியாகிப் போயுள்ளது.

இதில் விடுதலைப் புலிகளின் தளபதியொருவர் கூறிய கருத்து பொருத்தமாயபபடுகின்றது. உலகெங்கும் திரிந்து புலிகள் சிறுவர்களைச் சண்டைக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று பிரச்சாரம் செய்துவரும் லக்ஸ்மன் கதிர்காமர் அறிவுகெட்டதனமாய் பிசத்தித் திரிகின்றார் என்பதே அவரது கருத்து. பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் டாங்கிகள் கவச வாகனங்கள், விமானப்படை விமானங்கள், ஆட்டிலறிகள் மோட்டார்கள் என, பெரும் இராணுவ மதர்புடன் புறப்பட்ட ஜெயசிக்குறுப்படையினரை, மடக்கி நிறுத்தி, பல முனைகளில் ஊடறுத்தும் நேரடியாக மோதியும் சிங்களத்தின் இராணுவ வரலாற்றில் ஒரு பெரும் தலை குனிவை ஏற்படுத்தியிருப்பதுடன், தமிழீழப் போராட்ட வரலாற்றிலும்... உலகப்போரியல் வரலாற்றிலும் ஒரு சாதனையை, சிறுவர் படையால் நிகழ்த்தியிருக்க முடியுமா என்பதே அவரது கேள்வி. லக்ஸ்மன் கதிர்காமருக்கு இனமானம் துளியும் இல்லை ஆனால் அறிவும் அதேநிலைதானா..? இச்சிறுவிடயத்தை சிங்களமும் கதிர்காமரும் யோசித்துப் பார்ப்பதற்கு முன்னர்... சிங்களத்தின் இந்தப் பிரச்சாரத்திற்கு மயக்கங் கொள்ளும் அதனது எஜமானர்கள் யோசிக்கவேண்டிய கேள்வி இது. ★

சுப்பு

## தளபதி பெருமகிழ்ச்சி

**13.05.98** அன்று விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்ட நூற்றுக்கணக்கான இளைஞர் களையும் யுவதிகளையும் வரவேற்று உரை நிகழ்த்திய களமுனைத் தளபதி தீபன் 'புதிதாக போராளிகள் இணை வதைப் போன்று ஒரு தளபதியின் மனதை வேறெதுவும் மகிழ்ச்சி கொள்ள வைப்பதில்லை. ஜயசிக்குறுய் ஒரு வருட சமரானது விடுதலைப் புலிகளின் படையணிகளுக்குப் புதுப் பலத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் புதிய விழிப்புணர்வு ஏற்பட இது வழி சமைத்துள்ளது' என்றார். ★

## வெற்றிகளின் மூலகாரணம்

'எமது போராளிகளின் பொறுமைக்கும் அர்ப்பணிப்புக்கும் நிகர் அவர்களே. எமது மக்கள் என்றும் எங்கள் பக்கமே நிற்கின்றனர். இதுவே நாம் ஈட்டிவரும் வெற்றிகளுக்கு மூலகாரணம். விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு தேசிய அமைப்பாகும். எமது போராளிகள் கூலிக்காக களமாடுபவர்கள் அல்ல. எமது தாயகத்தை அந்நிய படைகளிலிடமிருந்து மீட்கவேண்டும் என்னும் உணர்வால் உந்தப்பட்டே நாம் போராடுகின்றோம்.' இவ்வாறு விடுதலைப் புலிகளின் சோதியா படைப்பிரிவின் தளபதி செல்வி துர்க்கா 13.05.98 அன்று வன்னியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை




ஏ. இராஜேந்திரகுமார்

புழுதியைக் கிளறிக்கொண்டு வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் 'குளிரருவி'யைக் கண்டவுடன் அமைதியாகி ஓய்ந்து நின்றது.

அந்தச் சிறு நகரின் முக்கிய இடத்தில் 'குளிரருவி' அமைந்திருந்தது. அதற்குப் பின்னால் சந்தை. சந்தை வாயிலில் சின்ன பிள்ளையார் கோவில். எல்லாவற்றையும் கவனித்தபடி குந்தியிருந்தார் பிள்ளையார். நகர் பரபரப்பாய் இருந்தது.

மோட்டார் சைக்கிளால் இறங்கிய காந்தன் முகத்தில் இருந்த கண்ணாடியை பணி நீக்கி 'பைக்கட்'டினுள் சிறைப்படுத்திக் கொண்டு உள்ளே சென்றான். பெயருக்கு ஏற்றாற்போல் மிகவும் இதமாய் இருந்தது. அந்த நான்கு சுவருக்குள் ஓடிக்கொண்டிருந்த அருவியில் தன் கொதித்த உடலைக் குளிர்வித்துக் கொண்டான். வெளியேறி மீண்டும் அந்த இயந்திரத்தை ஐந்து நிமிட முயற்சியின் பின் ஒருவாறு செயற்படுத்தினான்.

மோட்டார் சைக்கிள் உருள ஆரம்பிக்க ஒருவனது கை காந்தனைச் சுரண்டியது. திரும்பிப் பார்த்தான். சின்னப் பையன். "அண்ணா...." என்றவாறு தன் கையை வயிற்றிலும் வாயிலும் மாறிமாறி வைத்தான்.

"எடு.... கையை..... வீட்டை வாறியா. சாப்பாடு தல்லாம். உடுப்பு தல்லாம். ஏன் பள்ளிக்கூடமும் போகலாம். வாறியாடா" என்று காந்தன் வெருட்ட அவன் மௌனமானான். அவனது குடும்பப் பின்னணி காந்தனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

மீண்டும் "என்னடா வாறியா" என்று கேட்க அவன் தலையைச் சொறிந்துவிட்டு இடத்தைவிட்டு நகர்ந்தான். அந்தப் பையன் போவதையே பார்த்துக்கொண்டிருந்த காந்தன், தனக்குள் ஏதோ செய்வதை உணர்ந் தான்.

அவனைப் பார்த்தால் இந்தத் தொழில் செய்பவனைப்போல் தெரியவில்லை. அவனது உடை அவ்வளவு அழுக்கானதாகவோ தலைமயிர் வளர்ந்து காடேரியாகவோ தென்படவில்லை.... அவனது முகத்தில்...ஏதோ சோகம்...ஒரு வசீகரம்..இருக்கின்றது...அப்ப ஏன் இவன்...?

"தம்பி இங்கவா...." என்று கூப்பிட்டான்.

அழகிய சின்ன வேம்பு தன் கிளைகளை



அகலப்பரப்பி 'குளிரருவி'க்குச் செல்ல வசதியில்லாதவர்களை தன்னகத்தே கொண்டிருந்தது. அந்த மரத்தடியில் இருவரும் சென்றமர்ந்தனர்.

"தம்பி உனக்கு எத்தனை வயசு.... படிக்கிற நேரத்தில் ஏன் இப்படி.." என்று பேச்சை ஆரம்பித்தான்.

காந்தனின் பேச்சைக் கேட்டவன் மெல்ல அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தான். திடீரென மேகம் கறுத்து மழைத்துளி விழுவதுபோல் அந்தப் பிஞ்சின் முகம் கறுத்து..... நெஞ்சு கனத்து அந்த நினைவில் கரைந்தது!

************

பனைகளாலும் தென்னைகளாலும் சூழப்பட்டு அமைதியாகத் தூங்கிக் கிடந்தது 'நாவற்குழி' என்னும் சின்னக் கிராமம். கொஞ்சும் கடல் கொஞ்சும் வயல் நெஞ்சைக் கிள்ளும். அந்த இயற்கைக் காட்சி காலையில் துயிலெழுப்பும் கந்தனின் காண்டாமணி. இவை எல்லாவற்றிற்கும் மத்தியில்தான் சண்முகத்தின் வீடு. அழகான அமைதியான அந்தக் குடும்பத்தில் நால்வர் அடங்குவர்.

மனைவி சிவபாக்கியம். மூத்தவன் ராஜி. இளையவன் வேழன்.....இவர்களுடன் சண்முகம் இன்புற்று வாழ்ந்தான்.

இது இறைவனுக்குப் பிடிக்கவில்லையோ அல்லது சிங்கள தேசத்திற்குப் பிடிக்கவில்லையோ. இன வெறிப் படையினர் அப்பகுதியை ஆக்கிரமித்துப் படைமுகாமை நிறுவினர். அதன் பலன் சண்முகம் ஒரு காலை இழந்து படுக்கையில் வீழ்ந்தான். ஆம் வீழ்த்தப்பட்டான்.

அதனால் பத்தாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த ராஜி குடும்பச் சுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கால் இல்லாத தந்தை... வீட்டின் நான்கு சுவருக்குள் மட்டுமே பழக்கப்பட்டுப் போயிருந்த அம்மா. அ...ஆ..வை ..அரிசியில் பழகிக் கொண்டிருக்கும் தம்பி. அனைவரையும் சுமக்க ராஜி விறகு சுமந்தான்.

இப்படியே எட்டு வருடங்கள் தொலைந்துபோயின. ராஜி எலும்பும் தோலுமாய் இளைத்தேவிட்டான். ஆனாலும் வேழனை 'ஸ்கொலசிப்' சித்தி பெற வைத்துவிட்டான். சுமையிலும் அவனுக்கோர் திருப்தி.

இப்படி இருக்கும்போதுதான் அந்தக் கொடூரம் நிகழ்ந்தது. முழுத் தமிழினத்துக்கே நடந்த துயர். சிங்கள இனவெறியர் யாழ் மாவட்டத்தை ஆக்கிரமித்து சொத்துக்கள் சொந்தங்கள் எல்லாவற்றையும் அழித்து தமிழனை நிர்க்கதியாக்கி சொந்த இடங்களை விட்டுத் துரத்தி விட்டு....

உறவுகளை உடமைகளை இழந்து உள்ளம் உடைந்து காற்றால் கலைத்துவிடப்பட்ட முகில் கூட்டம் போல் திரள்திரளாக மக்கள் இடம்பெயர்ந்தனர். சொல்லில் அடங்காத அந்தக் கொடூர நிகழ்வுக்குச் சண்முகம் குடும்பமும் தப்பவில்லை.

தந்தையை கையால் தாங்கிக்கொண்டு, இன்னொருகையில் அகப்பட்ட பொருட்கள் அதனோடு தாயையும் தம்பியையும் கூட்டிக்கொண்டு...மெல்ல .... இல்லை விரைவாகச் சென்றான் ராஜி.

எங்கும் சனத்திரள்...ஒரு அடி எடுத்துவைக்க ஒரு மணி நேரம் எடுத்தது. துயருடன் சென்று கொண்டிருந்த அந்த நிமிடம் "இஸ்....ஸ்...." என்ற சத்தம் எல்லோரையும் பதட்டத்துடன் அண்ணாந்து பார்க்க வைத்தது.

"ஐயோ....கிபீர்...கிபீர்..." என்று யாரோ கத்தி முடிக்கு முன்... "டும் டுமீர்...டும்... என்ற சத்தம் வானில் எழுந்தது. எங்கும் புகை மண்டலம்.... அதனோடு சேர்ந்து "என்ர ஐயோ... அம்மா..." ஆளை ஆள் என்ர பிள்ளை எங்க என்ற சத்தங்களும் எழும்பியது. எல்லோருடைய வாய்களும் கத்திக் குழறின. "ஐயோ என்ர பிள்ளை...என்ர ராசா" தலையில் கையை வைத்துச் சிவபாக்கியம் கத்திக் குழற......

தவறுப்பட்ட வேழன் எப்படியோ ஓடி வந்து சேர... அந்தப் பிஞ்சின் கண்ணில் தென்பட்ட கொடூரக் காட்சி ராஜியும் தந்தையும் இறைச்சிக் குவியலாய்....

திடீரென மீண்டும் அந்தச் சத்தம் ...."இஸ்....ஸ்...". "அம்மா... எழும்புங்கோ...ஓடி வாங்கோ 'வாறான்...வாறான்..' என்ற சத்தத்தோடு ஓடி வந்தவர்கள்தான்... கடலேறி வன்னிக்கும் வந்துவிட்டனர்.

சிவபாக்கியம் அழுதழுது வருத்தக் காரியாகி விட்டாள். மூன்று மாதங்கள் பாடசாலை முகாமில் இருந்துவிட்டு அடுத்த இடப்பெயர்வுடன் வன்னியின் இதயத்திற்கு வந்து அயலவர் உதவியுடன் கொட்டில் போட்டு உண்டும் உண்ணாமலும் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

**********

"தம்பி...தம்பி....டேய்.." காந்தன் தோளைக் குலுக்க திடுக்குற்றவன் கண்கள் கலங்கியிருந்தது. நினைவில் சுமந்ததை காந்தனிடம் சொல்லி முடித்தான். காந்தனால் அதை ஜீரணிக்க முடியவில்லை.

"தம்பி நீயேன்.. எல்லாரிட்டையும் கை நீட்டுறா.. ஒரு கடையில போய் நிற்கலாம்தானே..." என்ற காந்தனின் பேச்சுக்கு...."எல்லாக்கடையியிலையும் கேட்டனான், நிற்கட்டாம் மாதம் முடியத்தான் சம்பளம் தருவினயாம்...அப்ப ஒவ்வொரு நாளும் அம்மா...சாப்பிடுறது....?" என்ற கேள்வியுடன் சொல்லி முடித்தான்.

"சரி...என்னோட வா வீட்ட சாப்பிடுவம்.." என்று காந்தன் எழ எத்தனிக்க...

"அண்ண அம்மாவுக்கு பத்து நாளா வருத்தம். ஆஸ்பத்திரியில இருக்கிறா. அங்க மருந்து இல்லையாம் 'பிறவேட்'டுல வாங்கி வரட்டாம், எல்லா பாமசியிலயும் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டன் எல்லாரும் பேசி....அனுப்பிப் போட்டினம்..."

"அதுதான் விடிய இருந்து எல்லாரிட்டயும் கை நீட்டி ஒவ்வொரு ரூபாவாய் சேர்த்துக்கொண்டிருக்கிறன்...." என்று கண்ணீருடன் கூறினான் வேழன்.

காந்தனால் பேச முடியவில்லை. அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. தனது பையினுள் இருந்த நூறு ரூபாவை எடுத்து அவனது கையில் திணித்தான். "இதைக் கொண்டுபோய் அம்மாவுக்கு மருந்து வேண்டிக்குடு போ..." என்று சொன்னதும் வேழன் நன்றி கூறிவிட்டு தாயைக் காண ஓடிப்போனான்.

"கீக்...தம்...தடார்.." என்ற பெரும் சத்தத்துடன் வேன் ஒன்று மரத்தோடு மோதி நின்றது...காந்தன் திடுக்கிட்டுத் திரும்பினான்.. 'டிக் டிக் டிக்...' இதயம் சற்று வெகமாக அடித்துக் கொண்டது. "அம்மா..." என்ற அலறல். சனக்கூட்டம் கூடிவிட்டது. காந்தன் செய்வதறியாது ஓடினான்.

அந்தக் காட்சியை அவனால் நம்ப முடியவில்லை. வேழன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். நூறு ரூபா நோட்டு காற்றோடு சுழன்று சுழன்று சென்றது. "சின்னப் பெடியன் .. இப்படியா தலை தெறிக்க' ஓடிவாறது..."என்று சனத்தோடு நின்ற ஒருவர் சொன்னார்.

காந்தன் அழுதேவிட்டான். அவனது நினைவில்...முகம் தெரியா வேழனின் தாய் வந்து போனாள். ★

*"அதுதான் விடிய இருந்து எல்லாரிட்டயும் கை நீட்டி ஒவ்வொரு ரூபாவாய் சேர்த்துக்கொண்டிருக்கிறன்...." என்று கண்ணீருடன் கூறினான் வேழன். காந்தனால் பேச முடியவில்லை. அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. தனது பையினுள் இருந்த நூறு ரூபாவை எடுத்து அவனது கையில் திணித்தான். "இதைக் கொண்டுபோய் அம்மாவுக்கு மருந்து வேண்டிக்குடு போ..."*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






வழிநெடுக விழிநீர் சிந்தி
பிறந்த மண்ணிழந்து பரிதவிக்கும் எம் இனமே
துன்பங்கள் துயரங்கள் தொடர்ந்தாற்போல் வருவதில்லை
நம் விடுதலைப் பயணமும் வெகுதொலைவில் இல்லை
சிங்களத்துக் கடிவாளம் நம் கையில் இப்போது
பகைவன் படைசிதறக் களமாடும் தலைவன் தானையுண்டு
விழுதென எழுந்தவர்க்குத் தோளென நாமிருந்தால்....
இருள் சூழ்ந்த எம் மண்ணின் இடர்மாறும்.

**- குப்பிழானூர் வே. காந்தரூபன் சுவிஸ்.**

துன்பத்தால் இதயம் கனத்திடினும்
கண்ணீரால் கண்கள் கரைந்திடினும்
சிங்களத்தின் வால் பிடித்துச்
சிற்றின்பம் தேடோம்
வழிகாட்டத் தலைவன் இருக்கையில்
விழிநீர் துடைத்து நாம் எழுவோம்
இடர் நிச்சயம் மாறும்
எல்லைகள் நம் கைசேரும்

**- திருமதி விமலா சச்சிதானந்தன் யேர்மனி.**

தானைத் தலைவன் செதுக்கிய வீரமறவர்களின்
கைகளில் துப்பாக்கி மட்டும் அல்ல
தலைவனின் உரம்பாய்ந்த நெஞ்சிலிருந்து
பெற்ற மனவுறுதியும்,
தமிழ் ஈழம் என்ற தாகமும் உள்ளவரை
எதிரிதொடுத்த வெற்றி நிச்சயம்
எம்மினத்திற்கு விடுதலை நிச்சயமாக்கி–
இடர் மாறிடும் நிச்சயம்!

**- சண்முகம் சண்முகேஸ்வரி பாரிஸ்.**

எம் பாதையில் பெரும் தடைகள்
பயணத்தின் முடிவுக்காய் பல ஏக்கங்கள்
சிவந்த நீரில் குளிப்புக்கள் முகாரியில் கேவல்கள்
எங்கள் தொடர் கதையின் முடிவு
காலத்தின் கையிலே அல்ல
நிச்சயம் இடர்மாறும் எங்கள் கதைக்கு
முடிவொன்று கிடைக்கும்
அன்று நம் கனவுகள் நிஜங்களை தரிசிக்கும்.

**- இளவாலையூர் தமிழி பிரான்ஸ்.**

இடர் மாறும் துயர் தீரும்
அறம் வெல்லும் மறம் வீழும்
இருள் அகலும் ஒளி பிறக்கும்
இனவெறியரின் இருண்ட ஆட்சி
இனமான இளம் வீரரிடம் மண்டியிடும்
சமரூடாகச் சமாதானம் என்ற சாதுர்யம்
சரிந்து விழச் செகமறியும் உண்மை நிலை
உதித்திடும் உலகினிலே தனியீழத் திருநாடு!

**-மனோகரன் மயில்வாகனம் லண்டன்.**

# இடர் மாறும்.....

ஆலமரமாய் விரிந்திருந்தோம்
அறுகம்புல்லாய் படர்ந்திருந்தோம்
சிங்களத்தின் இன வெறியால்
அழிவாகியது எம் மகிழ்ச்சி
பெருகியது யுத்த இருள்–ஈழச்
சுடர் ஏற்றும்போது–எம்
இருள் நீங்கும்
இடர் மாறும்!

**- கண்ணன் பிரான்ஸ்.**

நான் என்பது நாமாகி
எனது என்பது எமதாகி
வெளிநாட்டில் தமிழர்கள்
கரங்கள் ஒன்று சேர்ந்தால்
வெயில் கண்ட பனிபோலே
துயரங்கள் வடிந்தோடும்
ஈழத்தில் தமிழர்கள்
படுகின்ற இடர் மாறும்!

**-சந்திரவதனா செல்வகுமாரன் யேர்மனி.**

ஆராரோ கேட்டு அமைதியாகத் தூங்கும்
குழந்தைகள்
யாராரோ போடும் குண்டுமழையால்
வெதும்பியழுகிறது
வீரர்களை வரலாற்றில் படிக்க வேண்டியவர்கள்
வீரர்களாகி வரலாறாகும் அதிசயமங்கு
அநுபவத்தில் காணாத போரையும் நோயையும்
எதிர்கொள்ள இயலாது இறந்துபோகும்
வயோதிபர்
கூட்டிப்பெருக்கி கூடி வாழ்ந்தவர் மர
நிழல்களில்
இந்நிலை மாறும் இவ் இடரும் தீரும்!

**- மாதினி குணசீலன்
சுவிற்சலாந்து.**

தன்மானத்துடன் தலைநிமிர்ந்து
வாழவேண்டிய தமிழா
இன்னும் ஏன் ஓரக்கண் பார்வை?
உன் முழுப்பார்வையும் தாய்நாட்டில்
எப்போதான் செலுத்துவாயோ?
தமிழீழம் மலரும் நாளில்தான்
எம் மக்கள் இடர்மாறும்!

**-க. ம. சிறீரஞ்சன் யேர்மனி.**

பிறந்திட்ட புத்தாண்டில்
புலம்பெயர்ந்திட்ட மக்களின் கரங்கள் ஓங்கட்டும்
பகைவனின் கருத்துப் போரை முறியடிக்கட்டும்
வன்னி படைகளும் வளையட்டும்
தமிழர்கள் சேனையின் வீரம் வளரட்டும்
தமிழீழத்தில் ஈழக்கொடி பரவி ஆடட்டும்
அன்று எங்கள் இடர் மாறும்!

**- திரவியராஜா பிரகாஸ்**

எப்போதுதான் இந்த இடர்மாறும்?–தமிழா
ஏய்த்துப் பிளைப்பவர் களித்துப் போக–வாயின்
பேச்சிலே சிலர் சுகமாய் வாழ
தாக்குப்பட்ட நம் இன்னல்கள் மாறி–எப்போ
சிரித்திடும் வாழ்வு வந்தெமை சேரும்?
தாக்குப்பிடிக்கின்ற தலைமுறை சேர
சர்வமும் வழங்கிடும் நாள் வரும்போது–எங்கள்
சந்ததி சுமந்திடும் இடர் பறந்தோடும்!

**- பரதன் லண்டன்.**

வாழ வழி இருந்தும்
வளமான நிலம் இருந்தும்
எமக்கோர் நாடின்றி
இன்னல்படுகின்றோம்
நாமும் வாழ்வில் ஒருபகுதி
நாட்டுக்கு உழைத்துவிட்டால்
இடர் மாறும் வெகுவிரைவில்!

**- கே. தவராசன் யேர்மனி.**

***ஆக்கங்கள் அபிப்பிராயங்கள் அனுப்பிய
அனைவருக்கும் நன்றி***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

யூதர்களை மீளக் குடியமர்த்தி முடிந்ததும், ஸ்டார் ஒவ் டேவிட்டோடு கூடிய வெள்ளைக் கைப்பட்டி ஒன்றை யூதர்கள் அணிந்திருக்க வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டது. போலந்து டென்மார்க்கைப் போல் இருக்கவில்லை. இந்தக் கட்டளைக்கு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை. யூதர்களோ ஸ்டார் ஒவ் டேவிட்டோடு கூடிய பட்டிகளை முதுகிலும் அணிந்து கொண்டனர்.

> தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூதமக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம் என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.

வார்சோ முன்பனிக்காலம், 1939

இவைகள் லண்டவ் குடுப்பத்தினருக்கு மிகவும் கஷ்டமானதும், கசப்பானதுமான காலங்களாகும். மெண்டல் லண்டவ்வின் மரணம் யூதசேரிகளை மீள நிறுவப் போகும் கதைகள், ஜேர்மனியரின் மீள் குடியமர்தல் திட்டங்கள், பொருள் தட்டுப்பாடுகள் எல்லாம் சேர்ந்து வாழ்க்கையை நரகமாக்கியிருந்தன.

1940 இன் ஒரு காலைவேளையில் லண்டவ் வீட்டுக் கதவில் தட்டிக் கேட்டது. ஜெர்மனியருடன் இணைந்து வேலை செய்துவந்த போலந்து நாட்டு நீல உடைப் பொலீசார் வெளியே நின்றிருந்தனர். அவர்கள் லியா லண்டவ்விடம் அவள் இருமணி நேரத்தில் தனக்குச் சொந்தமானவைகளை எடுத்துக்கொண்டு, யூதர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வார்சாவில் பிறிதொரு பகுதிக்குச் செல்ல வேண்டும் என அறிவித்தனர். விட்டுச் செல்லப் போகும் வீட்டுக்கு நஷ்டஈடு எதுவும் கிடையாது என்பதோடு இருபது வருட மணவாழ்வில் லியா சேகரித்துக்கொண்ட பொருள்களை எடுத்துச் செல்ல நேரம் காணாதிருக்கும். லண்டவ்களும், வார்சோவின் மற்றைய யூதர்களும், வார்சோ நகர் நடுவே பிரதான புகையிரத மார்க்கத்துக்கு அருகே மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

மணடெக்கும், ஜானும், விரைவாகச் செயற்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட மீட்பாளர் குழு உறுப்பினர்களுக்கு வசிக்கவும், குழு தலைமைக் காரியாலயம் ஆகச் செயற்படவும் ஒரு மூன்று மாடிக் கட்டிடத்தைப் பெற்றுக்கொண்டனர். ஐந்து பேரைக் கொண்ட லண்டவ் குடும்பத்தினருக்கு சில கட்டில்களையும், இரு கதிரைகளையும் கொண்ட ஒற்றை அறை ஒன்று கிடைத்தது. குசினியையும், குளியல்அறையையும் வேறுபத்துக் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ள நேரிட்டது. ஜெரோசா விம்ஸ்கா வீதியில் இருந்து, சேமக்காலை வரையான 12 கட்டிடங்களின் நீளத்தையும், ஆறு கட்டிடங்களின் அகலத் தையும் கொண்ட ஒரு சின்னஞ் சிறு பரப்புக்குள் யூதர்கள் விரட்டப்பட்டனர். மீட்பாளர் குழுவினர், தூரிகை உற்பத்தியாளர்களின் மாவட்டத்தில், லெஸ்னோ வீதியில் இருந்தனர். மீட்பாளர்கள் தங்கள் உணவு இருப்புக்களை பொதுவாக சமையலறையில் பகிர்ந்து கொண்டிருந்ததால் உடனடி நிதித்தேவை ஏதும் இல்லாதுவிடினும் அவசியம் ஏற்படும் போது பாவிப்பதற்காக லியா சில நகைகளையும், பெறுமதி மிக்க பொருட்களையும் ஒளித்து வைத்திருந்தாள்.



மாகாணங்களில் இருந்து யூதர்கள், வார்சோவுக்கு வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கொண்டுவர அனுமதிக்கப்பட்ட பொருட்களை தோளிலோ, தள்ளு வண்டிகளிலோ, கைவண்டிகளிலோ, சுமந்தபடி நீண்ட வரிசைகளில் வந்து கொண்டிருந்தார்கள். யூத குடியிருப்புக்களின் அருகில் இருந்த புகையிரத பொதியிறக்கும் பகுதியில் புகையிரதத்தின் மேல் புகையிரதமாக யூதர்களைக் கொண்டு வந்து இறக்கினார்கள். அவர்களிருந்த சிறிய பரப்பு மிகவும் சன நெருக்கம் கொண்ட பகுதியாக மாறியது. ஜான் குடும்பத்தினரும் லண்டவ் குடும்பத்தினர் இருந்த பகுதிக்கு ஒற்றை அறைக்கு மாறினார்கள். இப்போ அந்த ஒற்றை அறையில் ஒன்பது பேர் இருந்தார்கள். ஜானுக்கும் றுத்துக்குமிடையே இருந்த காதல் பகிரங்க ரகசியமாயிற்று.

ஜெர்மனியர்கள், யூதர்களை, அவர்கள் இருந்த இடத்தில் நிர்வகிக்க ஒரு சபையை (Council) நியமித்தார்கள். ஆனால் விரைவிலேயே இது ஜெர்மன் கட்டளைகளை நிறைவேற்ற உபயோகப்படும் ஒரு கருவியாயிற்று. ஜெர்மனியரோடு ஒத்துப் போவதே சிறந்த வழி எனக் கருதிய வேறு சில யூதர்கள், விசேட யூத பொலிஸ் படையில் சேர்ந்து கொண்டார்கள். இப்படியாகக் குறுகிய பரப்பினுள், சனத்தொகை ஐந்து இலட்சத்துக்கும் அதிகமாகியது.

போலந்தை வெற்றிகொண்டு ஒரு வருடம் பூர்த்தியான 1940 இன் முடிவில் யேர்மனியர்கள் பல யூதர்களை கட்டாய வேலையணிகளில் இணைத்தனர். 10 அடி உயரமாகச் செங்கல் சுவர் ஒன்று வாசோவில் யூதர்கள் வாழும் பகுதியைச் சுற்றி எழுப்பப்பட்டது. அவற்றின் மேல் முட்கம்பிகள் பொருத்தப்பட்டன. அங்கிருந்து வெளியே போய்வர இருந்த 15 வாசல்களும், நீல உடை போலந்து பொலிசாராலும், லித்துவானியன்களாலும் காவல் செய்யப்பட்டன.

யூதசேரி! போலந்திற்கு திரும்பக் கிடைத்திருந்தது. சேரியிலிருந்து வெளியேயான போக்குவரத்துக்கள் கிட்டத்தட்ட ஸ்தம்பிதம் அடைந்தன. சேரிக்கு வெளியே தொழில் செய்துகொண்டிருந்த மாண்டெக் தொழில் இழந்தான். உணவுப் பங்கீடுகள் இருக்கும் தொகையில் அரைவாசிப் பேருக்கும் மட்டுமட்டாக விநியோகிக்கக்கூடிய அளவிற்குக் குறைக்கப்பட்டன. இருந்த பத்துப் பன்னிரண்டு கட்டாய வேலையணிகளில் இடம் பெற்றிருந்த அல்லது அதற்கான அடையாள அட்டைகளை வைத்திருந்தவர்களின் குடும்பங்களே உணவை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததும் தெளிவாயிற்று.

இந்தச் சேரியின் உருவாக்கம் பயப்பிராந்தியை ஊட்டியது. சில யூதர்கள் தங்கள் பெறுமதிமிக்க பொருட்களை உணவுக்காகப் பண்ணடமாற்றுச் செய்தனர். சில கத்தோலிக்கர்களின் வீடுகளுக்குத் தப்பிச்செல்ல முயன்றனர். தப்பியோடும் முயற்சிகள் ஒன்றில் சாவிலோ அல்லது சுவருக்கு அப்பால் இருந்தவர்களின் காட்டிக்கொடுக்கும் துரோகத்திலோ முடிவடைந்தன. சுவருக்குள்ளே உயிர்வாழ்வதற்கான தினசரி ஜீவமரணப் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இதனிடையே மாண்டெக் ஒரு தலைவனாக உருவாகியிருந்தான்.

### லியோன் யூறிஸ்

மீட்பாளர்களிடையே அவனுக்கிருந்த முக்கியத்துவத்தின் காரணமாக யூத குடியிருப்பினுள்ளேயே ஒரு பேக்கரியை நடத்த யூதர் சபையிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டிருந்தான். இப்படியானதொரு தொடர் முயற்சிகளால் அவனது குழுவினர் கிட்டத்தட்ட உணவு கிடைப்பதற்கும் உயிரோடிருப்பதற்கும் வழி தேடிக் கொண்டனர்.

யூதசேரியுள் எல்லாமே இருள்மயமாக இருக்கவில்லை. ஒரு தேர்ந்த இசைக்குழு வாராந்த இசை நிகழ்ச்சிகளை நடத்தியது. பாடசாலைகள் நேர்த்துக்கு நடந்தன. நாடகக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

**தொடரும்...**

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை **19- 06 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# விடியலை வென்றெடுக்க...

**கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:**

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

www.tamilarangam.net



## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் எட்டாவது அனைத்துலக உதைபந்தாட்டப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் எட்டாவது அனைத்துலக உதைபந்தாட்டப் போட்டி கடந்த 3ம் திகதி ஞாயிற்றுக் கிழமை இலண்டன் வோல்த்தம்ஸ்ரோ



என்ற இடத்தில் நடைபெற்றது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் மத்தியில் இலண்டன் கழகங்களும், பாரிஸ், டென்மார்க், யேர்மனி போன்ற நாடுகளிலிருந்தும் வந்த 24 கழகங்கள் T.R.O. வெற்றிக் கிண்ணத்துக்காக மோதிக் கொண்டன. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொடியை திரு. முத்தையா அவர்கள் ஏற்றி வைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளுக்காகவும், மக்களுக்காகவும் இரண்டு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப் பட்டது. உதைபந்தாட்ட நிகழ்வில் சேகரிக்கப்படும் நிதி வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் துரித புனர்வாழ்வுத் திட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று புனர்வாழ்வுக் கழக இலண்டன் பொறுப்பாளர் தனது பேச்சினி டையே குறிப்பிட்டார்.

உதைபந்தாட்டப் போட்டிகளின் இறுதியில் டென்மார்க்கிலிருந்து வந்து கலந்துகொண்ட 'ODESIAN' உதைபந்தாட்டக் கழகம் இலண்டன் லூசியம் கழகத்தை இறுதியாட்டத்தின போது 3 –1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரி த்துக் கொண்டது.

போட்டியில் இரண்டாம் இடத்தை லூசியம் கழகமும் மூன்றாம் இடத்தை புளூஸ் கழகமும் பெற்றுக் கொண்டன. மேலும் பத்து வயதுக்கு உட்பட்டோர், 12 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டமும் நடைபெற்றன. இதில் லூசியம், வோல்தம்ஸ்ரோ அணிகள் வெற்றிபெற்றன.

அன்றைய தினம் இடம்பெற்ற அதிட்டலாப சீட்டிழுப்பில் (1) 13856 (2) 4865 (3) 4044 என்ற இலக்கங்கள் வெற்றிபெற்றன. இவற்றுக்கான முதலாவது பரிசை 'Star Music - Welcome Centre - ரகு இரண்டாவது பரிசை 'Rani Fashion Design & Tailoring ' மூன்றாவது பரிசை 'Barathy Food & Stores Walthamstow ஆகியோரும் வழங்கியிருந்தனர்.

## யேர்மனியில் தமிழ் மாணவர் அமைப்பு நடாத்திய மாவீரர் நினைவு விளையாட்டுப் போட்டி

யேர்மனியில் ஆறாவது ஆண்டாக தமிழ் மாணவர் அமைப்பின் யேர்மனிக் கிளையினரால் மாவீரர் நினைவு விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டுகின்றன. ஆரம்பப் போட்டிகளாக, 04.04.98 சனிக்கிழமை டோட்முன்ட் நகரில் கரப்பந்தாட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டன. யேர்மனியிலிருந்து பதினைந்திற்கும் மேற்பட்ட கழகங்கள் இப்போட்டியில் கலந்து கொண்டன. இப்போட்டியில் ஓவர் கேம் ஆட்டத்தில் முதலாவது இடத்தை சார்புறுக்கன் சலாம் விளையாட்டுக் கழ்கமும், இரண்டாம் மூன்றாம் இடங்களை முறையே வாறன்டோப் தமிழோசை மன்ற விளையாட்டுக் கழகமும், கட்காட் ஐக்கிய தமிழர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக வாறன்டோப் தமிழோசை விளையாட்டுக் கழக வீரர் திரு. சிவகுருநாதன் இராசநாதன் தெரிவாகினார்.

செற்றப்கேம் ஆட்டத்தில் பங்கு கொண்ட விளையாட்டுக் கழகங்களில், முதலாவது இடத்தை புறூக்கல் ஐக்கிய விளையாட்டுக்கழகமும், இரண்டாவது மூன்றாவது இடங்களை முறையே சார்புறுக்கன் சலாம் விளையாட்டுக் கழகமும், கட்காட் ஐக்கிய தமிழர் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. சிறந்த விளையாட்டு வீரராக புறூக்சல் ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர் விஜயரஞ்சன் தெரிவாகினார். கப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விடுதலைப் புலிகள் யேர்மனிப் பணியக இணைப்பாளர் மாவீரர் வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார்.



கரப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்திய யேர்மன் தமிழ் மாணவர் அமைப்பு


மூன்றாவது வருட வெற்றிப் பாதை நோக்கி.......

இலண்டனில் மாபெரும் தமிழர் துடுப்பெடுத்தாட்ட விழா

24 - 05 -1998
ஞாயிறு காலை
('மே' வங்கி விடுமுறை வாரம்)

உண்டு மகிழ !
கண்டு களிக்க !
தாயக பூமி புகழ்
தரணியெங்கும்
மேலோங்க !
திரண்டிடுவோம்
அனைவரும் வாரீர்

30 பாடசாலைகளின்
ஒருங்கிணைந்த
பங்களிப்பின் சின்னமாக
தமிழர்களின் ஒன்றுகூடல்
பெருவிழா !

Wadham Lodge
Sports Centre
Wadham Rd
London E17


## 'வெற்றி நிச்சயம்' நடக்காது.....

போர் விமானங்களும் தாங்கி அணியும் ஆட்டிலெறியும் பாது காப்பு வழங்க மேற்கு நோக்கி நகர்ந்தது. முதல் 2 கி.மீற்றர் தூரத்திற்கு 55 ஆவது படைப்பிரிவு எந்த எதிர்ப்பையும் சந்திக்கவில்லை. அந்தப் புளுக த்தில் அந்தப்படையணி இருந்த போதுதான் அந்த அதிசயம் முற்றிலும் எதிர்பாராத அற்புதம் நடந்தது.

இரண்டு கிலோ மீட்டர் தூரம் திட்டமிட்டு இராணுவத்தை உள்ளே வரவிட்டு வியூகம் அமைத்து காத்திருந்த புலிகள் வெட்டவெளியில் தங்கியிருந்து தங்களது நிலைகளைப் பலப் படுத்திக்கொண்டிருந்த படையினர் மீது மோட்டார்த் தாக்குதலை இலக்குத் தவறாது திடீரென சாராமாரியாகத் தொடுத்தார்கள். அந்தப்போரில் உயிர்தப்பிய ஒரு இளம் அதிகாரியின் வார்த்தைகளில் சொல்லவேண்டுமென்றால் "மாரி மழை பொழிந்தது போல்" புலிகள் மோட்டார்களையும் செல்களையும் ஏவினார்கள். பொழுது சாய்ந்து மாலையான போது நாலு அதிகாரிகள் உட்பட நூற்றிற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். இரண்டு அதிகாரிகளைக் காணவில்லை. 294 இராணுவத்தினர் காயப்பட்டனர். இப்படிக் காயப்பட்டவர்களில் 125 பேர் படுகாயமடைந்தார்கள். ஜெயசுக்குறுய் போர்முனையில் புலிகள் நூற்றுக்கணக்கான மோட்டார்களையும் 122 மி.மீ, 126 மி.மீ ஆட்டிலறிகளையும் உபயோகிப்பது ஒரு புதிய பரிமாணமாகும். இந்த ஆட்டி லறிகள் முல்லைத்தீவு, புளுக் குணாவை இராணுவமுகாம்கள் தகர்க்கப்பட்டபோதும், கிளிநொச்சி இராணுவமுகாம் புலிகளால் தாக்கப்பட்ட போதும் கைப்பற்ற ப்பட்டவையாகும். மோட்டார்கள், ஆட்டிலறிகளை புலிகள் தாராளமாக உபயோகிப்பதுவே சிங்களப்படைக்கு ஏற்படும் உயிரழிவிற்கு முக்கிய கார ணியாகும்.

யாழ்ப்பாணத்தில் 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் போதுதான் புலிகள் நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஆட்டிலறி இல்லாக் குறையை உணர்ந்து கொண்டார்கள் என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். விடுதலைப் புலிகளின் போர்த்தந்திரங்கள், யுக்திகள், மின்னல்வேகத் தாக்குதல்கள், போர்முகத்தில் காட்டும் அளப்பரிய வீரம் உலக அரங்கில் அவர்களுக்கு ஒரு புதிய அந்தஸ்தைத் தேடிக் கொடுத்துள்ளது. உலகின் இராணுவத் தந்திரிகளை மூக்கின் மேல் கை வைத்து ஆச்சரியப்பட வைத்துள்ளது. தமிழ்மக்களைப் பொறுத் தளவில் வன்னிப் போர்முனையில் புலிகளால் நடாத்தப்படும் யுத்தம் கனவா அல்லது மாயமந்திரமா எனத் திகைக்க வைத்துள்ளது. ஓராண்டு பூர்த்தியாகியும் வன்னிப் பெருநிலப்பரப்பில் ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கை முடங்கிக் கிடப்பதால் இராணுவத்தளபதி ரொகான் தளுவத்தைக்கு இன்னுமொரு ஆண்டு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு 68 கோடி ரூபா செலவாகும் இந்தப் போரினால் முன்னாள், இன்னாள் முப்படை த்தளபதிகள் மற்றும் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் பலர் இராணுவத்தளபாட கொள்வனவுகளில் மோசடி செய்து, இரவோடு இரவாக கோடீஸ்வரர்களாக மாறிவிட்டார்கள். பதவி உயர்வுகள் வேறு தாராளமாக வழங்கப் படுகிறது. சாதாரண கேணலாக விருந்த அனுரத்த ரத்வத்தயே இராணுவ ஜெனரலாகிவிட்டார். சாதாரண சிப்பாய்களும், பொலி சாரும் தமிழர்களை புலிகள் என்ற சந்தேகத்தில் கைது செய்து பின் கைலஞ்சம் வாங்கிக்கொண்டு அவர்களை விடுவிப்பதால் இலட்சாதிபதியாகி விட்டார்கள். உண்மையில் போரினால் பாதிப் படைந்தவர்கள் சாதாரண நாட்டுப்புறச் சிங்கள மக்களே.

அவர்களது பிள்ளைகளே பிழைக்க வேறு வழியின்றி இராணுவத்தில் சேர்ந்து அநியாயமாகச் செத்து மடிகிறார்கள். ரத்வத்தயின் மக்கள் கொழும்பில் இரவு விடுதிகளிலும் ஐந்து நட்சத்திர கோட்டல்களிலும் குடித்து விட்டு கும்மாளம் போட்டுத் திரிகிறார்கள். சந்திரிகா தனது பிள்ளைகளைப் பத்திரமாக இலண்டனுக்கு அனுப்பிப் படிக்க வைத்திருக்கிறார்.

மாங்குளத்தைப் பிடிக்க முடியாமல் வன்னிக்காட்டில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இராணுவத்திற்கு ஆட்பலம் போதாது என்ற காரணத்தைக் காட்டி இப்போது சிங்கள மாணவர்களை வலை வீசிப்பிடிக்கும் முயற்சியில் துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுரத்த ரத்வத்த இறங்கியுள்ளார். இந்த முயற்சிக்கு போருக்கு தூபதீபம் காட்டும் சிங்களப் பத்திரிகை ஆசிரியர்களின் ஒத்துழைப்பை ரத்வத்த கோரியுள்ளார்.

ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கையைப் பொறுத்த அளவில் சந்திரிகா அரசிற்கு பொதுவாகவும், அனுருத்த ரத்வத்தவுக்கு சிறப்பாகவும் அது ஒரு மானப்பிரச்சினையாகி விட்டது. எனவே எப்படியும் என்ன விலை கொடுத்தும் வவுனியா – கிளிநொச்சி தரைப்பாதையைத் திறந்தே தீருவதென சந்திரிகா அரசு கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது. இதனால் போரை முடிவிற்குக் கொண்டு வந்து, நாட்டில் ஓடும் இரத்த ஆற்றை நிறுத்த வேண்டுமென்ற கோரிக்கை எதனையும் அந்த அரசு காதில் போட்டுக்கொள்ளத் தயாராயில்லை. மாறாக புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற சிங்கள பேரினவாதிகளினதும், மஞ்சல் அங்கிக்குள் ஒழிந்து கொண்டி ருக்கும் போர் வெறியர்களதும் ஆசையை நிறைவேற்றுவதிலேயே அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

ஆனால், செங்குருதி சிந்தி வெங்களத்தில் சிங்களப்படையைப் பந்தாடி வரும் விடுதலைப் புலிகள் ஆயுதபாணிகளாக இருக்கும் வரை இந்தப்பேரினவாதிகளது கனவுகள் நிறைவேறப் போவதில்லை என்பது திண்ணம்.

**"வெற்றி நிச்சயம்" நடக்காது**
**"தோல்வி நிச்சயம்" நடக்கும்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வான்விடு தூது

தரணி திகைக்கவும்
தமிழர் விழிக்கவும்
பரணி உயிர்க்கவும்
பகைவர். ஒளிக்கவும்
மரணித் தானுமோர்
மானந் தளிர்க்கவும்
பொருதித் தாயகம்
போற்றிடும் புலிகளே!

கரும்புலியாகியும்
களப்புலியாகியும்
திரைகடல் ஆளும்
கடற்புலியாகியும்
திரும்பிய திசையெலாம் தமிழ்ப்
படையாகித்
துரும்பெனப் பகையைத்
துரத்திடும் வீரரே!

பெற்ற நம் நாட்டையும்
பேசுயிர் மொழியையும்
பற்றுடன் போற்றுதல்
பயங்கரவாதமாய்க்..
'குற்றம். தேசியக்
கொள்கை' யென்றாக்கிப்..
பட்டப் பகலிலே
படையுடன் புகுந்து...
முற்றம் மிதித்து..
முதுகெலும் புடைத்துப்...
பற்றியிழுத்தெம்
பெண்களைக் கெடுத்துக்..
கொட்டமடித்துக்..
குளறிடக் குதறிச்
சுற்ற மெரித்துச்
வூறையுமாடிப் பின்
கட்டியிழுத் தெங்கள்
கழுத்தையும் நெரித்துச்
சட்டத்தின் முன்னெமைச்
சவங்களாய் நிறுத்திய
ஒற்றையாட்சியை
உடைத்திட எழுந்த உம்..
வெற்றியைப் போற்றி
வீழ்ந்து வணங்கினோம்!

சிங்களப் பேரின
வாதக் குடையின் கீழ்
எங்களை நசுக்கிய
இராணுவப் பிசாசுகள்..
குண்டையும் செல்லையும்
கூசாது பொழியப்..
பிஞ்சுகள் குஞ்சுகள்..
பெற்றவர் முதியவர்..
வெந்துடல் கருகி..
விழிகளும் செருகி..
சிந்தியே குருதி...
சேற்று நீர் பருகி..
நொந்து நோய் பெருகி
நித்திரை அருகி...
கந்தையைச் சொருகி..
கண்ணீரில் உருகி..
சந்திகள் தெருவிற்
சாரியாய் நடக்க..

ஊர்கள் அழுதன..
உறவுகள் சாவதன்
கோரந்தாங்காது
கூவிக் கதறின!
பாரம் பரியமாய்ப்
பதிந்து குலவிய
வேரைப் பிரிந்து
விலங்குவாழ் கானகம்
சேர நிகழ்ந்தது
சுதந்திர யாசகம்!

நெய்தல் நெரிந்தது!
மருதம் மசிந்தது!
முல்லை முறிந்தது!
"த்த பெருங்குடி..
கல்லிலும் முள்ளிலும்
கால்கள் பதித்தது!
எல்லையில் நின்று

இருகரம் நீட்டியே

சொல்லொணாத் துயருடன்
சேர்த்தனள் பாலையாள்!

அவனி கண்களை
இழுத்து"டியே
கவனி யாதுதன்
கனவிலே களிக்கையிற்
பவனம் நிரம்பிய
பாழ் பிண வாடையில்
மனிதம் தனிவழி
பயணங்கள் செய்தது!

அவதி யுற்ற எம்
ஆருயிர் மக்களின்
அவலங் கண்டுந்தம்
அரசியல் உயர்வுக்காய்க்
கவலையின்றியே
ஆயுதம் குவித்திடப்
பவனி வந்தது
பாவியர் பாசறை!

உலகின் பாரிய
ஊடகம் பலவும்
நிலமை கூறா
தூமையாய் நின்றன!

ஆமத்துறுமார் ஆசிகள் வழங்க..
அகில உலகமும் ஆயுதம்
வழங்க..
தூமகேதுவாம் சந்திரிகாவின்
சாமர்த்தியத்தில் 'வெற்றி நிச்சய'
நாமம் நாலா திசையும் தொட்டது!
நாசம் செய்திடத் தேசமே
திரண்டது!
ரோமம் சிலிர்க்கச் சிங்களத்
தேசிய
ராணுவப் படையின் முரசம்
ஒலித்தது!

புலிகளை முற்றாய்ப்
பு+ண்டோடழித்த பின்..
எலிகளாய் எம்மை
இருத்தியெம் உரிமையைப்
பலியிடும் நோக்குடன்
பாவியின் அரசவை
சலிப்பின்றி யுத்தச்
சகதியிற் குதித்தது!

முல்லை மலர்களே!
முடிவிலாக் கவிகளே!
வெல்லக் குரலால்
வீட்டை நிறைத்தவரே!
செல்லக் கனிகளெனச்
சிறுகன்னம் நுள்ளுகையில்
மெல்லச் சிரித்து
மேனி சிலிர்த்தவரே!

சத்தியக் குழந்தைகாள்!
சமதர்மச் சிற்பிகாள்!
அற்புதத் தலைவனின்
அணிசேர்ந்த வேங்கைகாள்!

நீதிப் பெருந்தாயின்
நிழலின் தர்மத்தாய்
காதில் உரைத்த
கீதைக்கு உரியவரே!

இல்லத்து முகப்பில்
'அப்பட்டா' விளையாடிக்
கொல்லென்று நகைத்துக்..
கெந்திப் பிடித்தவரே!

சொல்லாத ஆசைகளின்
சொர்ப்பனத்தைச் சுமந்தவரே!
எல்லாரும் சிரிக்கக்
கைவாள் எடுத்தவரே!

எல்லைக்குள் வந்த
எதிரி முகங்கண்டு
பல்லைக் கடித்துப்
பார்வையால் எரித்தவரே!

பள்ளி வாழ்வையும்
பசிய மெல்லுணர்வையும்
வெள்ளைத் தாளென
விரிந்த நெஞ்சையும்
கொள்ளை கொள்ளையாய்க்
கூட்டிய கனவையும்
அள்ளி முடித்துங்கள்
ஆத்மாவுள் புதைத்த பின்
தெள்ளு தமிழ்ப் படை
தேடியே சேர்ந்தவரே!

மனிதத்தின் முனகலில்
மானத்தை யுணர்ந்தவரே!
புனிதமாய் விடுதலையைப்
போற்றி வளர்த்தவரே!

இளைய கரங்களில்
ஏற்றிய ஆயுதப்
பளுவை மறந்து
பாய்ந்திடும் மறவரே!

களையும் தாகமும்
கடும் பசி மறந்து
விழிகள்"டாது
விரைந்திடும் யோகிகாள்!

உயிரைப் பாணமாய்
ஈந்திடும் யாகிகாள்!
வைரமாய் பாய்ந்து
வெடித்திடும் தேகிகாள்!

பள்ளிச் சிறுவரின்
பாய்ச்சல் இது வென்று
எள்ளி நகைத்தவர்
எரி குழம் பருந்தினர்!

வானத்திருந்து
வையத்து வந்துதித்த
ஞானத் தலைவனின்
தரிசனம் புரிந்தனர்!

உலகப் பலத்துடன்
உறுமிய இராணுவம்
உண்மையின் பலத்தை
உட்கொண்டு தளர்ந்தது!
திலகமிட்டு
வடதிசை வந்தவர்
தலை கவிழ்ந்து
தலைநகர் மீண்டனர்!

அன்று...
சிங்களப் படைகள்
சிதறிய வேளையில்
இந்தியம் எமது
இனியமண் புகுந்தது!
தங்குடை சரியத்
தப்பினோம் என்று
வங்காளக் கடலிடம்
விடைபெற்றுச் சென்றது!

இன்று...
தங்களை யிழந்து
தமிழீழம் விட்டுச்
சிங்களம் விடைபெறும்
செய்தியும் வந்தது!

ஆண்டு ஒன்றாகியும்
ஆவதொன்றின்றி
மாண்டிடும் நிலையில்
மீள்வது கண்டனம்!

மேதகு தலைவனை
மார்புறத் தழுவும்
வீர நல் மறவரே!

பாதகி படைக்குப்
பாடம் புகட்டிய
போரியல் அறிஞரே!

வேதனைக் கடலில்
நீந்திய காலையும்
சோதனைப் புயலிற்
சுற்றிய வேளையும்
சாதனை புரியும்
சரித்திர வேந்தரே!

அன்னை தமிழ்த் தாய்
ஆனந்தப் பெருக்கோடு
உம்மை யணைப்பாள்!
அர்ச்சனை செய்வாள்!

மண்ணை மீட்ட
மாதவர் என்று
கண்களில் உங்கள்
காலடி சுமப்பாள்!

உலகத் தமிழனை
உயர்த்திய தமிழரே!
உரிமைக்காக
உயிர்தனைப் பாய்ச்சும்
இளைய கதிர்களே!
இதயச் சுடர்களே!

ஆயிரம் மைல்கள்
போயினர் என்று
தாய்நிலம் எம்மைத்
தூரவும் நோக்கலாம்!
நாயெனப் பிறரின்
காலடி ருசிக்கும்
காய்க ளென்றெம்மைக்
கவிதைகள் கூறலாம்!

ஆயினும் எங்கள்
ஆருயிர் மண்ணிற்
தீயென எரியும்
விடுதலைக் கனலில்
நாங்களும் இணைவோம்
நம் கடன் புரிவோம்!

தாமொரு இனமாய்த்
தலை நிமிர்ந்திருக்க
நாவொலியெழுப்பும்
நல்லதோர் இனத்தின்
ஊமைக் குரலை
உலகினுக் கொலிக்கப்
பாவும் கலையும்
படைத்துமைத் தொடர்வோம்!

வானில் எம் கொடி
வனப்புடன் பறக்கும்
நாளை எண்ணிப்
படையெனத் திரள்வோம்!

நாளைய தமிழன்
நிமிர்ந்த நெஞ்சுடன்
வாழ்ந்திட உமது
பாதையில் நடப்போம்!

வாழி எம் தலைவன்
வாழி எம் புலிகள்
வாழி எம் தாய் மண்
வாழி எம் தேசம்
வாழி எம் தாய் மொழி
வாழி இவ் வுலகே .

புலவர் சிவநாதன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்